# மலர்ந்த ஜீவியம்

**ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்**

**Vol. V Issue 12 March 2016**

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| லைப் டிவைன் . . . . . . . . . . . . . | 2 |
| இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . | 8 |
| சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . | 9 |
| யோக வாழ்க்கை விளக்கம். . . . . . | 11 |
| பூரணயோகம் - முதல் வாயில்கள் | 14 |
| அஜெண்டா . . . . . . . . . . . . . . . | 16 |
| வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள் . | 18 |
| இந்தியர் வாழ்விலுள்ள முரண்பாடுகள் . . . . . . . . . . . . | 21 |
| நிதானம் . . . . . . . . . . . . . . . . . . | 30 |
| அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . | 38 |
| அன்பர் அனுபவம் . . . . . . . . . . . | 45 |
| **அன்னை இலக்கியம்** | |
| தெய்வீக ஆனந்தம். . . . . . . . . . . | 50 |


**ஜீவியத்தின் ஓசை**

*நல்ல ஆத்மாவுண்டு. நல்ல மனிதனிருக்க முடியாது.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள்
யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

ஸ்ரீ அரவிந்தம்

## லைப் டிவைன்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

ஆங்கிலம்: லெஸ்லி ஜேக்கப்ஸ்
தமிழாக்கம்: வித்யா ரங்கன்
திருத்தம்: ஸ்ரீ கர்மயோகி

## II/1. Indeterminates, Cosmic Determinations and the Indeterminable

Page 296
Para 2

Even the knowledge gained is only of phenomena.

It is not of the reality of things.

It is not of the foundations of existence.

When our consciousness meets what seems to be a foundation.

That foundation wears the appearance of a blank.

It is an original state which is featureless.

It has a multitude of consequences which are not inherent in the origin.

Nothing in it seems to justify or necessitate them.

There is a mass of superstructure.

It has no clear native relation to the fundamental existence.

The first aspect of cosmic existence is an Infinite.



## II/1. பிரபஞ்ச சிருஷ்டி பிரம்ம சிருஷ்டி

கிடைத்த ஞானமும் தோற்றத்திற்குரியதே.

விஷயங்களின் சத்தியத்திற்குரியதல்ல.

வாழ்வின் அடிப்படைக்குரியதல்ல.

நம் ஜீவியம் அடிப்படை போன்ற தோற்றம் கொண்ட ஒன்றைச் சந்திக்கிறது.

அப்போது அவ்வடிப்படை வெறுமையான தோற்றத்தைக் கொள்கிறது.

அது சிறப்பியல்புகள் அற்ற ஒரு ஆரம்ப நிலை.

அது ஏராளமான விளைவுகளைக் கொண்டது. ஆனால் அவை மூலத்தில் அமையப்பெற்றவை அல்ல.

அதில் உள்ளவை எதுவும் அவற்றின் இருப்பை நியாயப்-படுத்துவதாகவோ அல்லது அவசியப்படுத்துவதாகவோ தெரியவில்லை.

புற அமைப்பிற்கான பொருண்மை அங்கு உண்டு.

அதற்கு அடிப்படை வாழ்வுடன் தெளிவான, சொந்தமான தொடர்பு இல்லை.

பிரபஞ்ச வாழ்வின் முதல் அம்சம் ஒரு அனந்தம்.

To our perception it is an indeterminate, if not indeterminable.

In this Infinite the universe itself appears as an indeterminate determination.

It appears as a “boundless finite”.

This is in its aspect of Energy or its aspect of structure.

These are paradoxical but necessary expressions.

They seem to indicate that we are faced with a supraratonal mystery.

It is the base of things.

In that universe arise a vast number and variety of determinates.

They do not appear to be warranted by anything in the nature of the Infinite.

They seem to be imposed—or self-imposed—upon it.

We call the Energy which produces them Nature.

But that word conveys no meaning.

Unless it means the nature of things is what it is by virtue of a Force.

That Force arranges them according to an inherent Truth in them.

But the nature of that Truth is not visible.



அது நிர்ணயிக்க முடியாததன்று என்றாலும் நம் அறிவிற்கு நிர்ணயங்களைக் கடந்த ஒன்று.

இந்த அனந்தத்தில் பிரபஞ்சமே நிர்ணயிக்கப்படாத நிர்ணயமாக தோற்றம் அளிக்கிறது.

அது வரம்பற்ற வரையறையாக தோற்றம் அளிக்கிறது.

இது அதன் சக்தி அல்லது உருவமைப்பு எனும் அம்சங்களில் உள்ளது.

இவை தமக்குத் தாமே முரண்படுபவையாக இருந்தாலும் அவசியமான வெளிப்பாடுகள்.

அறிவுக்கு எட்டாத ரகசியம் நம் முன்னே உள்ளதை இவை குறிப்பது போல் உள்ளன.

அது விஷயங்களுக்கு அடிப்படையானது.

அந்தப் பிரபஞ்சத்தில் எண்ணற்ற வகைகளாக நிர்ணயங்கள் எழுகின்றன.

அனந்தத்தின் குணத்தில் நிர்ணயங்களைச் செயல்படுத்தும் அவசியத்தை எதுவும் ஏற்படுத்துவதாகத் தோன்றவில்லை.

அவை அதன் மேல் திணிக்கப்பட்டது போல் அல்லது தானே தன்மேல் விதித்துக் கொண்டது போல் தோன்றுகின்றன.

அவற்றை உற்பத்தி செய்யும் சக்தியை நாம் இயற்கை என்கிறோம்.

ஆனால் அந்த வார்த்தை எந்த அர்த்தத்தையும் தரவில்லை.

ஒரு சக்தியின் இயக்கத்தால் எழும் விளைவு அதன் இயல்பைக் குறிப்பதாக அது பொருள் படலாம்.

அந்தச் சக்தி அவற்றின் உள்ளார்ந்த சத்தியத்தின் அடிப்படையில் அவற்றை சீரமைக்கிறது.

ஆனால் சத்தியத்தின் தன்மை பார்வைக்குப் புலப்படவில்லை.

Or the reason why these determinates are what they are.

Human Science has been able to detect many processes of material things.

But this knowledge does not throw any light on the major question.

The rationale of the original cosmic processes is not known.

The results present only as their pragmatic, actual consequence.

These determinates stand forth on the Indeterminable.

They stand as on a blank and flat background.

Their ordered occurrence is a riddle.

How did these determinates come out of the original Indeterminable?

At the origin of things there is the Infinite.

It contains a mass of unexplained finites.

It is an Indivisible full of endless divisions.

It is an Immutable teeming with mutations and differentiae.

A cosmic paradox is the beginning of all things.

It is a paradox without any key to its significance.

Contd...



அல்லது இந்த நிர்ணயங்கள் நிர்ணயங்களாக ஏன் உள்ளன என்ற காரணம் காணப்படவில்லை.

ஜடப்பொருட்களில் பலதரப்பட்ட செயல்முறைகளை விஞ்ஞானம் கண்டுபிடித்துள்ளது.

ஆனால் இந்த ஞானம் முக்கிய கேள்விக்கு உரிய பதிலை தெளிவுபடுத்தவில்லை.

மூலமான பிரபஞ்ச செயல்முறைகளின் பகுத்தறிவுக்கேற்ற காரணம் தெரியவில்லை.

அதன் பலன்கள் அவற்றின் நடைமுறைக்கேற்ற, உண்மையான விளைவுகளாக மட்டுமே தோன்றுகின்றன.

இந்த நிர்ணயங்கள் நிர்ணயிக்க முடியாததன் மீது நிற்கிறது.

அவை வெறுமையான மற்றும் தட்டையான பின்னணியின் மீது நிற்பது போல் நிற்கின்றன.

அவற்றின் முறையான நிகழ்வு ஒரு புதிர்.

மூலமான நிர்ணயிக்க முடியாததிலிருந்து இந்த நிர்ணயங்கள் எவ்வாறு வெளிப்பட்டன?

இவற்றின் ஆரம்பத்தில் அனந்தம் உள்ளது.

அது தன்னுள் விவரிக்க முடியாத அணுக்களின் திரட்சியைக் கொண்டது.

அது முடிவற்ற பிரிவுகளின் ஒரு பகுக்க முடியாத முழுமை.

அது மாறுபாடுகள் மற்றும் வேறுபாடுகள் கொண்ட ஒரு மாற்றமற்ற பெருக்கம்.

புதிரான பிரபஞ்சம் அதன் ஆரம்பம்.

பிரபஞ்சம் விடையற்ற ஒரு முரண்புதிர்.

தொடரும்...

## இம்மாதச் செய்தி

# இடையறாத நினைவே இன்றியமையாத நிபந்தனை.



**சாவித்ரி**

**Page 182: And keep him as per cherished prisoner**

*செல்லக் கைதியாகப் பெற்று, பெற்றதைப் போற்றி*

✡ ஊழிக் காலத்திற்கும் இனி அவர்கள் பிரிய முடியாதபடி

✡ ஆத்ம நித்திரைக்குரிய அரசவை போன்ற அறை

✡ முதலில், ஆழ்ந்த அகத்திற்குரிய அறையை ஏற்படுத்தினாள்

✡ மறந்த விருந்து போன்று ஆழ்ந்த மரக்கட்டை உறக்கத்திற்கு

✡ ஆனால் இப்பொழுது அந்த மந்திரக்கட்டை உடைக்க முயன்று

✡ சிற்பங்களான படுக்கையில் தூங்குபவனை எழுப்பி

✡ மீண்டும் தெய்வமிருப்பதை அவள் ரூபமாகக் கண்டாள்

✡ அவளுடன் துயிலெழும் ஒளியுடன் மீண்டும் புதுப்பித்து

✡ காலம் ஊர்வதில், அதன் அவசரத்தில். கருத்தைத் தேடி

✡ இதுவரை ஆத்மாவை இருளாக சூழ்ந்த மனம் மூலம்

✡ கண்பார்வையைக் கடந்த தெய்வ மின்னல் கடந்து சென்றது

✡ ஆத்ம லோகத்தின் குறுக்கே, அதன் கனவூடே

✡ வானவில் பாலமாக சிருஷ்டியைச் சிருஷ்டித்து

✡ மூலத்தின் மௌனத்திற்கும் சூன்யத்திற்கும் இடையே

✡ அசையும் பிரபஞ்சத்தை வலையாக மாற்றி

✡ விழிப்பான அனந்தத்திற்குப் பொறியை உருவாக்கி

✡ தம் சுவட்டை மறைக்கும் அறிவுள்ளது

✡ எல்லாம் வல்ல ஊமை அறியாமையென உலகம் கண்டு

✡ அற்புதங்களை உண்மையென அறிவிக்கும் ஆத்ம வலிமை பெற்றவள்

✡ எளிய செயலும் நம்ப முடியாத அதிசயமாகும் ஏற்புடையவள் அவள்

✡ அவள் எண்ணமும், அவள் செயலும் புதிரான விடுகதைகள் நிரூபிக்கின்றன

✡ கூர்ந்து பார்த்தால், அவை தோற்றத்தினின்று மாறுகின்றன

✡ விளக்கம் விளங்கியதையும் குழப்பும்

✡ நம் உலகிலும் ஓர் புதிர் ஆட்சி செய்கிறது

✡ புவியின் எளிய தெளிவு திருட்டுத்தனமாக மறைக்கும் திரை

✡ அவள் உயர்மட்டங்கள் மந்திரத்தாலானவை

✡ புதிர் அங்கு மாய வண்ணக் கண்ணாடியாகும்

✡ பொதுவான மறைவு ஆழமாக அங்கில்லை

✡ கனத்த சூட்சுமம் கண்ணில் படும் அனுபவம்

✡ அற்புதம் புதியதாக எழும், அதிசயம் தெய்வீகம்

✡ மறைந்த பாரம், இனம் புரியாத ஸ்பர்சம்

✡ மறைந்த உணர்வின் இரகஸ்யம்

✡ முகத்தில் களிமண் மூடி இல்லாவிடினும்

✡ தன்பார்வையினின்று விலகி தன்னுள் மறைகிறாள்

✡ ரூபங்கள் மறைந்த மகிமையின் மாண்புறு சின்னம்

### ஜீவிய மணி

*மனம் மாறினால் எதிரான பலன் வரும்.*



## யோக வாழ்க்கை விளக்கம்

### 22/29. அழிக்கும் நிலையாமை அழியாத நிலைமையை உருவாக்கவல்லது. நிலையான நிலையாமை.

- நிலையான பிரம்மம் நிலையில்லாத சிருஷ்டியை நாடியது.
- *சிருஷ்டி நிலையினிழிந்த நிலையாமை.*
- சிருஷ்டியில் நிலையாமை என்பது பிரம்மம், பிரபஞ்சமாகி, பிரபஞ்சம் உலகமாகி, மீண்டும் பரிணாமத்தால் உலகம் பிரபஞ்சம் வழி பிரம்மத்தை அடையும் சலனமான போக்கு.
- *நிலையாமை நிலையாக இருக்க அடிப்படையான நிலை தேவை.*
- அந்நிலை ஒளியின் வேகத்தில் மாறும் பிரபஞ்ச சலனம்.
- மனித உடல் குழவிப் பருவத்தினின்று வளர்ந்து மாறுகிறது.
- காலையிலிருந்து மாலைவரை உணவு, நடை, சிந்தனை, செயல் என்ற இடைவிடாத மாற்றமுண்டு.
- *வயதிற்குரிய மாற்றமும், வாழ்க்கைக்குரிய மாற்றமும், அன்றாட செயலின் அயராத மாற்றமாக நிலையாக நிகழ்வது மனித வாழ்வு.*
- பூமி தன்னைத்தானே சுற்றி வருவதும், சூரியனைச் சுற்றி வருவதும், பிரபஞ்ச சலனமும், அணுவுள் உள்ள அனந்தமான சலனமும் மனித வாழ்வின் நிலையான தன்மைக்கு அடிப்படை.
- மனித வாழ்வு செயலாலானது.
- உடலால் வாழும் மனிதன் நாகரிகத்தால் வளர்ந்து உயிரால் வாழ்கிறான்.
- *அதனின்றும் உயர்ந்து மனத்தாலும், ஆத்மாவாலும், வளரும் ஆத்மாவான சைத்திய புருஷனாலும் வாழ்கிறான்.*

- எந்த நிலையில் வாழ்ந்தாலும், அவனுக்கு அந்த நிலையில் நிலையாமையும், நிலையும் உண்டு.
- உடலால் வாழ்ந்தவன் ஆதி மனிதன்.
- அவன் உடலுக்கு உணர்வுண்டு.
- தன்னைத்தானே பாதுகாக்கும் திறன் அவன் உடலின் வாழ்விற்கேயுண்டு.
- நமக்கு இன்று அது இல்லை.
- நாம் அத்திறனை நாகரிகத்தாலும், மனவளர்ச்சியாலும் இழந்து விட்டோம்.
- *உடலுணர்வை உடலின் உணர்வாக இழந்ததை மனத்தின் உணர்வாக மீண்டும் பெறுவது மனிதன் சத்திய ஜீவனாவது.*
- நாலு, ஐந்து ஆயிரமாண்டாக நாகரிகம் என நாம் அறிவது உடல் வளர்ந்து உயிராகி உயிர் வளர்ந்து மனமாகி, மனம் வளர்ந்து ஆத்மாவாகி, ஆத்ம வளர்ச்சி சைத்திய புருஷனாகும் பாதை.
- *யோகம் தத்துவமாகி, தத்துவம் நிதர்சனமான திருஷ்டியாகும் பொழுது மேற்சொன்ன அத்தனை மாற்றங்களும், ஒரே சமயத்தில் உள்ளும் புறமும் இன்று நம்மில் நடப்பது தெரியும்.*
- யோகம் சமர்ப்பணத்தால் நடப்பது.
- பக்தியும் ஆர்வமும் சமர்ப்பணத்தை எழுப்பும்.
- சமர்ப்பணம் சரணாகதியில் பூர்த்தியாகும்.
- சமர்ப்பணமற்ற வாழ்வு உச்சகட்டத்தில் மனத்தின் வாழ்வாகவும், தாழ்ந்த நிலையில் உடல் வாழ்வாகவும் அமையும்.
- ஒவ்வொரு செயலும் அதன் சிறு உருவம்.
- அதனுள் உடலிலாரம்பித்து சைத்திய புருஷன்வரை உள்ள அனைத்தும் உண்டு.



- நேரம் காலத்தால், செயலில் வெளிப்படுவது வாழ்வு.
- *காலம் இடத்தில் வெளிப்படுவதைத் தத்துவம் இயற்கை எனக் கூறும்.*
- ஆத்மா இயற்கை வழி வளர்ந்து சைத்திய புருஷனாவது சிருஷ்டி முடியும் பரிணாமம்.
- பரிணாமத்தை இயற்கையில் காண்பது யோகம்.
- பரிணாமத்தை வாழ்வின் செயலில் அறிவது யோக வாழ்வு.
- அதை அறிய உதவுவது புறம் அகமாகி, கீழ் மேலாவது.
- அது வாழ்வில் யோக மாற்றம்.
- *அதனால் யுகம் க்ஷணமாகும்.*
- அம்மாற்றம் தரும் அனுபவம் ஆனந்தம்.
- ஆனந்தம் ஜடத்தில் வெளிப்பட்டால் நிரந்தரமாகும்.
- ஜடத்தில் வெளிப்பட்டு ஆனந்தம் நிலையாக மாறுவதால் ஜடம் ஆனந்தமய ஜீவனாகும்.
- அன்பன் சமர்ப்பணத்தால் சாதகனாகும்பொழுது அர்ப்பணிக்கப்பட்ட செயல் உடலில் நன்றியாக வெளிப்படுவது உடல் புல்லரிப்பது.
- சரணாகதி பூர்த்தியாவதும், திருவுள்ளம் நிறைவேறட்டும் என்பதும், உடல் புல்லரிப்பதும் மூன்று வகைப்படும் ஒரே செயலாவதால் அவற்றை

*திருமூர்த்திகள் என*
*நான் குறிப்பிடுவது வழக்கம்.*

**ஜீவிய மணி**

*ஜீவாத்மாவையும் பரமாத்மாவையும் இணைக்கும் பாலம் பக்தி.*

## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 122. எதுவும் செய்ய முனைப்பு எழாதவருக்கு யோகம் பலிக்கும்.

- சுறுசுறுப்பானவர் எதையாவது செய்ய நினைப்பார்.
- சோம்பேறிக்கு எதுவும் செய்யக்கூடாது எனத் தோன்றும்.
- சிந்திப்பவருக்கு ஏதாவது சிந்தனையெழும்.
- கற்பனையாளர் மனம் கற்பனையைக் கட்டுப்படுத்த முடியாது.
- *சிறு குழந்தையால் ஓடியாடாமலிருக்க முடியாது.*
- எவருக்கும் எந்த நேரமும் சுறுசுறுப்பான நேரம்.
- சுறுசுறுப்பு அகந்தையின் முனைப்பு.
- வழக்கத்திற்கு மாறாக எதுவும் செய்யத் தோன்றாதவர்க்கு பூரணயோகம் பயிலும் விருப்பமிருந்தால் கூடி வரும்.
- அந்த நேரம் - சும்மாயிருக்கும் நேரம் - வராது. வந்தால் ஓரிரு நிமிஷமிருக்கும். ஐந்து அல்லது பத்து நிமிஷமிருப்பது கேள்விப்படாதது.
- *ஐந்து நிமிஷம் அந்நிலையிருந்தால் அதைப் பத்து நிமிஷமாக்க வேண்டும் அல்லது ஆறு நிமிஷமாக்க வேண்டும். அல்லது மீண்டும் அது வரும்படி செய்ய வேண்டும்.*
- அது தானே வந்தது. நாம் செய்யக் கூடியது என்ன?
- நாம் முயல்வது அகந்தையின் முனைப்பல்லவா?
- தானே வந்தது என்ற தெளிவு அகந்தையைக் கடந்த தெளிவு.
- அகந்தையைக் கடந்தது மனம், ஆத்மா. அவற்றில் எதன் தெளிவு, எப்படி வந்தது. "நான்" செயல்படக் கூடாது என்றால் நான் செய்யக்கூடியதென்ன?



- அகந்தையைக் கடந்த மனத்திற்கு மனச்சாட்சியுண்டு.
- மனச்சாட்சி பொன் விலங்கு என்றார் **Mother.**
- மனமும் சாட்சி சொல்லாத நேரம் மனத்தைக் கடந்த நேரம்.
- மனத்தைக் கடந்த நேரம் ஆத்ம விழிப்புள்ள நேரம்.
- மனத்தைக் கடந்து விட்டோம் என்பது ஆன்ம விழிப்பு, ஆன்மாவின் தெளிவு. அகந்தை சுறுசுறுப்பானது. அகந்தையைக் கடந்தால் மனம் முழு விழிப்புப் பெறும். இவை தானே நடப்பவை.
- *புலன் செயல்படாத நேரம் அகந்தையைக் கடந்த நேரம்.*
- இந்த "எண்ணங்கள்" அகந்தையின் ஆசை, மனத்தின் புலன் கூறும் சாட்சி ஆகியவற்றைக் கடந்த நேரம். பொதுவாக "விழிப்பு" ஏற்பட்ட நேரம். விழிப்பு ஏற்பட்ட நேரம் யோக தீட்சை பெற்ற நேரம்.
- தீட்சை மௌனமாகவோ, அமைதியாகவோ, ஆனந்த-மாகவோ அற்புதமாக ஆச்சரியமாக அதிசயமாக மனத்துள் உருவாகும்.
- அது அவருக்கு யோகம் பலிக்கும் நேரம் எனக் காட்டுவதாகும்.
- *சும்மாயிருந்து சுகம் பெறும் நேரம் அது.*
- *அந்த நேரம் உள்ளே **Mother** பகவான் தோன்றுவது அவர் அனுபவிக்கும் ஆசீர்வாதம்.*

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பிறர் பிரச்சனையைத் தீர்க்க முடிவது யோக சக்தி. பிறர் பிரச்சனையைத் தீர்க்க மறுப்பது யோக சித்தி.

சுயநலத்திற்கும் யோக சித்திக்கும் தோற்றம் ஒன்றே.

## அஜெண்டா

### எரிச்சல் முழுமையாக இல்லாவிட்டால் தெளிவு முழுமையாக இருக்கும்.

அறிவு இல்லாவிட்டால் குழப்பம் ஏற்படும். அந்நிலையில் செயல்படும் அவசியமில்லாவிட்டாலும் நிம்மதியாக இருக்க முடியாது. அவசியமிருந்தால் செயல்படும் சக்தியிருக்காது. தெம்பில்லாத பொழுது செயல்படும் நிர்ப்பந்தமிருந்தால், எரிச்சல் குபுகுபு எனக் கொந்தளித்து எழும். *செயல்படுவது உடல், அதற்குரிய சக்தியைத் தருவது இதயம். தெளிவாக இதயம் செயல்பட அனுமதிப்பது விஷயத்தைப் புரிந்து கொள்ளும் அறிவு.* ஆபீஸ் காரியதரிசியாகப் பிரியப்படுபவனுக்கு 80 ஓட்டுகள் தேவைப்படுமானால் அவனுக்குள்ள நண்பர் குழாமே 8 பேர்கள் என்று தெரிந்தும் தேர்தலில் நிற்க விரும்புகிறான். ஒருவர் அவனை நியமிக்க வேண்டும், மற்றொருவர் ஆமோதிக்க வேண்டும். அதற்கே நண்பர்கள் தானே முன்வரவில்லை என்பது வேட்பாளருக்குத் தெரிகிறது. இவனுக்கு யார் ஓட்டுப் போடுவார்கள். ஏன் அப்படிச் செய்வார்கள் எனப் பலரும் பேசுவதைக் கேட்கிறான். எந்தப் பிரதம மந்திரி எந்தத் தொகுதியில் நின்றாலும் அவரை எதிர்த்து நின்றவன் ஒருவன். அவன் தன்னைப்பற்றி என்ன நினைக்கிறான் என நாம் தெரிந்து கொள்ள முடியுமா? சஞ்சீவ ரெட்டியை ஜனாதிபதியாக நியமித்தவர் இந்திரா காந்தி. அவரே ரெட்டியை எதிர்த்து வேலை செய்தார். ரெட்டி அந்த எலெக்ஷனில் தோற்றார். அடுத்த எலெக்ஷனில் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். எலெக்ஷன் என்பது பொதுவாழ்வின் ஆழ்ந்த அம்சம். நம் நாட்டிற்கு ஆங்கிலேயன் வரும்வரை, 1800 வரை அது புதியது. நான் சொல்லும் நபர் எலெக்ஷன் முடிவில் 4 ஓட்டுகள் பெற்றார். நகர காங்கிரஸ் தலைவர் எலெக்ஷனில் நிற்க முயன்று முனிசிபல் தேர்தலில் நின்றார். அவர் தனக்கே ஓட்டுப் போட்டார். எண்ணிக்கை முடிந்தபின் அவர் பெற்ற ஓட்டு 1. அவருக்கு ஒரு மகனும், இரு மகள்களும், மனைவியும் உண்டு. எலெக்ஷனில் தன் நிலையை அறியவே முடியாதவர் தலைமைப் பதவிக்கு ஆசைப்பட்டார். 4 ஓட்டுகள் வாங்கியவரை வழியில் நிறுத்தி "எலெக்ஷன் என்ன ஆயிற்று" எனக் கேட்டால் அவருக்குப் பதில் எழாது. கோபம் வரும். கோபம் அடங்காது. *அடங்காத கோபம் எரிச்சலாகக் குமுறும்.* சமூகம், ஊர், நண்பர், வீடு, உற்றார், உறவினர் இதை வெளியிட அனுமதிக்க மாட்டார்கள். எரிச்சல் வந்து குமுறியவர்க்கு எரிச்சல் அடங்காது. அது செல்லாது எனத் தெரியும். *சமூகம் மனிதனை உருவாக்கும் பல வழிகளில் இதுவும் ஒன்று.* முழுமையாக எரிச்சலில்லாத நிலையைக் கூறுவது **Agenda**. அவன் 90 ஓட்டுகள் பெற்று ஜெயித்திருந்தாலும், "எலெக்ஷன் என்ன ஆயிற்று?" எனக் கேட்டால் "என்னைப் பாராட்டாமல் கேள்வி கேட்கிறான்" என்று நெஞ்சு பதறும். அதனால் எரிச்சல் வரும். எரிச்சலே எழாமலிருக்க, ஒன்று அவன் செய்ய எதுவுமிருக்கக் கூடாது அல்லது அவன் சுபாவத்தில் சாந்தப் புருஷனாக இருக்க வேண்டும். அவனுக்குரியது தலைப்பு. பிறரைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், நம் மனம் அமைதியுற்றிருக்க வேண்டும். *நாம் எதிராளியைப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அவர்மீது நமக்கு அக்கறை கூடாது.* "அக்கறையற்றவர் அறிவு பெறுவார்" எனக் கூறலாம். அவதார புருஷர்கட்குக் குறையுண்டு. விவேகானந்தருக்கும் கோபம் வரும். பரமஹம்சரும் பங்கிம் சந்திரர்மீது எரிந்து விழுந்தார். அவதார புருஷர்களின் குறை மனிதனுடைய குறையை எதிரொலிப்பது. மனிதனுக்குள்ள எல்லாக் குறைகளையும் ஏதோ ஒரு வகையில் பிரதிபலிக்காமல் அவதாரம் ஜனிக்க முடியாது. அவதாரம் ஆண்டவன் உலகில் பிறப்பது. உலகம் என்பது மனித குலம். மனித குலம் நிறையை எட்ட முயல்வதால் அது தன் குறையினின்று ஆரம்பிக்கிறது. *மனித குலத்தை உய்விக்க வந்த அவதாரம் மனித குலத்தைப் பிரதிபலிப்பது அவசியமாதலால் குலத்தின் குறை குணத்தின் சிகரமான அவதாரத்தில் இருக்க வேண்டும்.* எரிச்சல் (**reaction**) மனித சுபாவத்தின் மையம். "நான் எரிச்சல் படப்போவதில்லை" என்ற முடிவு செய்தவுடன் அம்முடிவு எரிச்சலின் மூலத்தைத் தொட்டுக் கிளறி மேலே கொண்டு வரும். எரிச்சல் எரிச்சலாக வரும்!

# வாழ்க்கையை நம் வழிக்குக் கொண்டு வரும் இரகசியங்கள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

16. நம்முடைய அறிவு செய்யக் கூடிய வேலைகளை நம்முடைய அறிவிடமே விட வேண்டும். அறிவால் செய்ய முடியாத வேலைகளில் நம் உள்ளெழுச்சி என்ன சொல்கிறதோ அதன்படி செயல்பட வேண்டும். இப்படி அந்தந்த கரணம் அதற்குண்டான வேலையைச் செய்து கொண்டு ஒன்றோடு ஒன்று மோதிக் கொள்ளாமல் இருந்தால் நல்லது என பகவான் கூறுகிறார்.

மனித முன்னேற்றம் என்பது உடலாலான மனிதன் வளர்ந்து மாறி சிந்தனையால் செயல்படும் — மனத்திற்குரிய மனிதன் — மனிதனாவது. இம்முயற்சியில் உடல் தான் கற்ற பழக்கங்களை விட மறுக்கும். ஆசைப்பட்ட பழக்கங்களை விட உயிர் மறுக்கும். மனம் உடலுடனும், உயிருடனும் போராடி வெல்வதை மனித முன்னேற்றம் என அறிவோம். வெல்லும்வரை இப்போராட்டங்கள் மனித முயற்சிகளை எல்லாம் விரயமாக்கும். அதைத் தவிர்க்க பகவான் மேற்கூறிய கருத்தைத் தெரிவிக்கிறார்.

டாக்டர் பட்டம் படிக்க அமெரிக்கா போனவர் மனைவி மக்களைப் பிரிந்திருக்க முடியாமல் சிறிது நாட்களில் திரும்பி வந்தார். வியாபார விஷயமாக ஜெர்மனி போன சென்னை தொழிலதிபர் தமிழ் நாட்டு உணவு கிடைக்காத காரணத்தால் உடனே திரும்ப வந்துவிட்டார். இதுபோன்ற சமயங்களில் உடலோ, உணர்வோ ஏற்காத பழக்கத்தை வற்புறுத்தக் கூடாது என்கிறார் பகவான். அறிவு ஏற்பதை அறிவிடமும், உணர்வு ஏற்பதை உணர்விடமும் விட்டுவிட்டால் எதிர்ப்பும், விரயமும் இரா.

காலம் மாறும்பொழுது நடை, உடை, பாவனை மாறும். மனம் வளர்ந்த காலத்தும் அவை மாறும். மாறுவனவற்றை பழக்கம் ஏற்க முடியாமல் சிரமப்படும் நேரம் ஏற்படும் சிக்கல்



இது. கிராமத்து மக்களுக்கு ஸ்பூனால் சாப்பிட முடியாது. நகரத்திலே பிறந்து வளர்ந்தவரால் ஆறு, குளத்தில் குளிப்பது இயலாது.

மேல்நாட்டிற்குப் படிக்கப் போகும் மாணவர்கள் அங்குள்ள பெண்ணை மணப்பதுண்டு. அவர்கள் கணவனைப் பெயரிட்டு அழைப்பர். எல்லா வேலைகளையும் செய்யும்படி கூறுவர். அது இல்லாத சங்கடத்தை ஏற்படுத்தும். ஏற்க மனமும், பழக்கமும் முரண்டு செய்யும். சைவமான வீட்டுப்பெண் அசைவ குடும்பத்தில் திருமணம் செய்து கொண்டு படும் அவஸ்தை பெரியது. அப்பெண்ணை மாமிசம் சாப்பிட வற்புறுத்துபவரும் உண்டு. அது மேலும் வேதனை. அன்னையை ஏற்றுக் கொண்டபின் சுப முகூர்த்தம், இராகுகாலம், பண்டிகை விசேஷங்களைக் கைவிட அன்பர்கள் முதலில் சிரமப்படுவார்கள். அந்த நேரம் சுபாவத்தையொட்டிப் போக வேண்டும். எதிர்க்கக் கூடாது. அதனால் சுபாவத்தையே முடிவாக ஏற்க வேண்டும் என்பதில்லை. சுபாவத்தை அதையொட்டி மாற்ற வேண்டும். முதலில் மனமும், பிறகு பழக்கமும் மாறினால், மனம் புதிய நிலையை ஏற்றபின் பழக்கத்தை மாற்றுவது சிரமமில்லை. மாம்பழம், ஐஸ்கிரீம் போன்ற உணவுப் பண்டங்களை எந்த நாட்டாரும் எளிதில் ஏற்றுக் கொள்வதால், இந்தச் சட்டத்திற்கு அது போன்றவை விதிவிலக்கு.

பாரதியார் காலனைத் துச்சமாகக் கருதினார். மரணம் அவருக்குப் பயம் விளைவித்ததில்லை. ஆனால் அவருக்குக் காலனை மீறிச் செயல்படும் யோக சித்தியில்லை. “காலா, உன்னைக் காலால் இடறுகிறேன்” எனக் கவிதை எழுதினார். இது மகத்தான செயல், என்றாலும் தன் தகுதிக்கு மீறிய செயல். பாரதி அவர் வாழ்ந்த நாளில் எவர் சொல்லையும் ஏற்றதில்லை. திருவனந்தபுரம் மிருகக் காட்சி சாலையில் சிங்கத்தைப் பிரியமாக வருடிக் கொடுத்து கர்ஜிக்கச் சொன்னார். அதுவும் கர்ஜனை செய்தது. அதைக் கண்ட பாதுகாவலர் எதையும் செய்யலாம், வாயினுள் கையை விடக் கூடாது என எச்சரித்தார்.

அறிவால் உணர்வைக் கடக்க முடியும். உடலைக் கடக்க முடியும் என்றாலும் உள்ளபடி கடந்து வருமுன் அவைகட்கு உட்பட்டு நடப்பது அறிவுடைமை என்பது கருத்து. பகவானுடன் வந்த ஐந்து பேரும் சாதகரில்லை. தேசபக்த வீரர்கள். அவர்களில் எவரையும் பகவான் யோகம் செய்யும்படி அழைக்கவில்லை. ஒருவர் மட்டும் அதை விழைந்தார். பகவான் செய்த முதற்காரியம் அவரைச் சொந்த ஊருக்கு அனுப்பி திருமணம் செய்து கொள்ளச் சொன்னார். அதன்பின் ஆண்டுதோறும் ஒரு மாதம் மனைவியைச் சந்திக்க அனுப்புவார். நான்கு குழந்தைகள் பிறந்தபின் மனைவியைப் புதுவைக்கு அழைத்துவரச் சொன்னார். சுபாவத்தையொட்டி செயல்பட்டார் பகவான்.

### ஜீவிய மணி

*உன்னை அழிக்க வேண்டும் என்ற உடன் பிறந்தவர் வாழ்வில் எதிரி. யோகத்தில் அவர் உன் அகந்தையை அழிக்க அன்னை பயன்படுத்தும் கருவி. உன்னை அவமானப்படுத்துபவர் உன்* vital ego *உணர்வின் அகந்தையை அழிப்பவர். திரௌபதியை அவமானப்படுத்திய அரசவை, கர்ணன் ஆகியோர் அவள் உணர்வின் அகந்தையை அழித்து கிருஷ்ண தரிசனம் செய்யப் பயன்பட்ட கருவிகள்.*

*யோக சித்திக்குரியவர்க்கு உடைமையைப் பறிக்கும் உறவினரும், உரிமையைப் பறிக்கும் நண்பரும், மானத்தை அழிக்கும் மனைவி அல்லது கணவனும், அறிவான செயலை ஏற்காத நண்பரும், அதிகாரத்தை ஏற்காத சிஷ்யனும், சேவையை மறுக்கும் சூழலும், நல்லதை அழிக்கும் பெரியவர்களும், சிறப்பை மறக்கும் சிறியவர்களும் அமைவார்கள்.*

**ஏந்நிலையிலும் அழிவது ஆத்மா இல்லை. அகந்தையாகும்.**
**அழிவுக்குரியது அநித்தியம், நித்தியம் அழிவற்றது.**



# இந்தியர் வாழ்விலுள்ள முரண்பாடுகள்

மூலம்: ஸ்ரீ கர்மயோகி
விரிவாக்கம் மற்றும் சொற்பொழிவு: திரு. N. அசோகன்
சொற்பொழிவு ஆற்றிய தேதி: 15.08.2015

இந்தியர்கள் வாழ்வில் நிறைய முரண்பாடுகள் உள்ளன. அந்த முரண்பாடுகள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அதற்குப் பின்னாலுள்ள உண்மை என்ன என்று தெரிந்துகொள்ள ஒரு எண்ணம் தோன்றியது. அதன் விளைவுதான் இந்தச் சொற்பொழிவு.

1. *காந்திஜி அவர்களைத் தேசத்தின் தந்தை என்று அழைக்கிறோம். ஆனால் அவருடைய கொள்கைகளை அரசியலிலோ, பொருளாதாரத்திலோ பின்பற்றுவதில்லை. இருந்தாலும் அவரைத் தேசத்தந்தை என்று அழைக்காமல் இருப்பதில்லை. அப்பட்சத்தில் ஏன் இந்த முரண்பாடு வருகிறது.*

தேசத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தவர் என்ற முறையில் அவரைத் தேசத்தந்தை என்று நாம் எல்லோரும் அழைக்கிறோம். இவ்விஷயத்திலுள்ள உண்மையை யாரும் மறுக்க மாட்டார்கள். ஆனால், அவருக்குக் காட்டும் நன்றி விசுவாசமாக அவருடைய கொள்கைகளை அரசியலிலும் பொருளாதாரத்திலும் பின்பற்ற வேண்டும் என்று பேசும்போதுதான் பிரச்சனை எழுகிறது. ஆங்கிலேயனை வெளியேற்ற அவருடைய சத்தியாக்கிரகமும், ஒத்துழையாமை இயக்கமும் உதவின. ஆனால் ஆங்கிலேயனை வெளியேற்ற முயற்சி செய்து கொண்டிருக்கும் பொழுதே உருவான மற்ற சில சூழ்நிலைகள் மிகவும் மாறுபட்டுப் போனதால், அவருடைய சத்தியாக்கிரகத்தையோ, ஒத்துழையாமை இயக்கத்தையோ அரசாலும், நாட்டு மக்களாலும் பின்பற்ற முடியவில்லை. உதாரணமாக இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்தபோது, ஜப்பானிய படைகள் பர்மாவிற்குள் நுழைந்து விட்டன. பர்மா நாட்டை வென்றபின் இந்தியாவிற்குள் நுழைவார்கள் என்ற அபாயம் ஏற்பட்டது. அப்போது காந்திஜி அவர்கள்

ஜப்பானிய வீரர்கள் அப்படி நுழைந்தாலும் ஆயுதம் தாங்கி நாம் அவர்களை எதிர்க்கக் கூடாது. அஹிம்சா முறையில் அவர்களை நாம் எதிர்கொள்ள வேண்டும் என்று பேசினார். இதை நேருஜி, மற்றும் பட்டேல் போன்றவர்கள் ஒத்துக் கொள்ளவில்லை. அவர்களே ஒத்துக் கொள்ளாதபோது ஆங்கில அரசாங்கம் எப்படி ஒத்துக் கொள்ளும்? இந்திய ராணுவம் ஜப்பானிய சேனைகளை மணிப்பூரிலுள்ள இம்பால் நகரிலும், நாகாலந்திலுள்ள கொஹிமா நகரிலும் எதிர்கொண்டு தாக்கி முறியடித்து விரட்டின. அம்மாதிரி எதிர்த்துத் தாக்கி இருக்கா-விட்டால், ஜப்பானியர்கள் இந்தியாவின் வடகிழக்கு மாகாணங்களை ஆக்கிரமித்திருப்பார்கள். இம்மாதிரி காந்திஜி-யின் கருத்துகளை அமல்படுத்த முடியாத சூழ்நிலைகள் பல எழுந்துள்ளன.

இந்தியா சுதந்திரம் அடைந்தபின்னும் ஹைதராபாத் சமஸ்தானத்தை ஆட்சி செய்து கொண்டிருந்த நிஜாம் அவர்கள் இந்தியாவுடன் ஒன்று சேர மறுத்தார். தனி நாடாக இருக்கப்-போவதாக அறிவித்தார். இந்தியாவின் உள்துறை அமைச்சராக இருந்த பட்டேல் அவர்களுக்கோ காந்திஜியை போன்ற ஒரு பொறுமை இல்லை. அவர் உடனேயே செயல்பட விரும்பினார். அதனால், இந்திய ராணுவத்தை அங்கு அனுப்பி நிஜாமைப் பணிய வைத்தார். இம்மாதிரி வன்முறையைப் பயன்படுத்தியே ஆக வேண்டும் என்றொரு கட்டாயம் கோவாவை இந்தியா-வுடன் இணைக்க வேண்டும் என்ற ஒரு அவசியம் வந்தபோது ஏற்பட்டது. காந்திஜியின் ஒத்துழையாமை இயக்கத்திற்குக் கட்டுப்பட்டு ஆங்கில அரசு 1947-இல் நாட்டைவிட்டு வெளியேறியது. அதைத் தொடர்ந்து இந்திய அரசு கேட்டுக்-கொண்டதின் பேரில் பிரெஞ்சு அரசும் தன்னுடைய ஆட்சியின்கீழ் இருந்த புதுச்சேரியைத் தானே முன்வந்து கொடுத்துவிட்டுப் போய்விட்டது. ஆனால் போர்ச்சுகீசிய அரசும் தானாக இவ்வாறு வெளியேற முன்வரவில்லை. கோவாவை விட்டுக் கொடுக்கவே மாட்டோம், என்ன ஆனாலும் சரி என்றொரு பிடிவாதமான முடிவிலிருந்தனர்.



1947-62 வரை இந்திய அரசு எத்தனையோ முறை கேட்டுக்-கொண்டபோதும் போர்ச்சுகீசிய அரசு சம்மதிக்கவில்லை. இதற்கு மேலும் பொறுக்க முடியாது என்ற நிலை எழுந்த-போதுதான் இந்தியா ராணுவத்தை அனுப்பி, வலுக்கட்டாயமாக போர்ச்சுகீசிய ராணுவத்தை வெளியேற்றியது. காந்திஜி இங்கிலாந்தை ஒத்துழையாமை இயக்கத்தின் மூலம் எதிர்த்து வெற்றி கண்டார் என்பதில் பல விசேஷங்கள் இருக்கின்றன.

முதலாவதாக இங்கிலாந்து ஒரு ஜனநாயக நாடு. சட்டத்தை மதிக்கின்ற ஒரு நாடு. இதே நம் நாட்டை ஆட்சி செய்தது இங்கிலாந்தாக இல்லாமல் ஜெர்மெனியாக இருந்திருந்தால், நடக்கின்ற விஷயமே வேறு. ஹிட்லர் போன்ற சர்வாதிகாரிகள் காந்திஜியின் எதிர்ப்பைச் சட்டப் பூர்வமாகவே எதிர்கொண்-டிருக்கமாட்டார்கள். அவரை உடனடியாக கைது செய்து, தூக்கில் போட்டிருப்பார்கள் அல்லது ராணுவ firing squard-ஆல் சுட்டிருப்பார்கள். ஆங்கிலேயன் பெருந்தன்மையானவன் என்பதால்தான் அவரை தூக்கில் போடாமலும், சுட்டு வீழ்த்தாமலும் அமைதியாக சிறையில் தள்ளினான். சிறை வாசம் முடிந்து வெளியே வந்தபின் அவர் மீண்டும் தன்னுடைய ஒத்துழையாமை இயக்க எதிர்ப்பை தொடர்ந்து வெளிக்காட்டிக் கொண்டிருந்தார். இம்மாதிரி பல சமயங்களில் காந்திஜி அவர்களுடைய அரசியல் கருத்துகள் நாட்டின் பாதுகாப்பிற்கு ஒத்துவராமலேயே இருந்திருக்கிறது. இந்தியா சுதந்திரம் அடைந்தபின் அதற்கு இராணுவமே தேவையில்லை. நாம் நிராயுதபாணியாகவே இருக்கலாம் என்றொரு கருத்தைத் தெரிவித்தார். காங்கிரஸ் கட்சி முழுவதுமே இதனால் அதிர்ந்துப் போனார்கள். பாக்கிஸ்தான் ராணுவம் வைத்துக் கொள்ளாத-பட்சத்தில் நாமும் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று சொன்னால் ஒருவேளை காங்கிரஸார் கேட்டுக் கொண்டிருப்-பார்கள். ஆனால் பாக்கிஸ்தான் ராணுவத்தை வைத்துக் கொள்ள முடிவு செய்தபின் இந்தியாவிற்கு அது தேவையில்லை என்று சொன்னால் எப்படி ஒத்துக்கொள்வார்கள். தன்னுடைய முடிவை காங்கிரஸ் அரசியல் கூட்டத்தில் ஒரு தீர்மானமாக கொண்டுவர

முயற்சி செய்தபோது எல்லா காங்கிரஸாரும் ஒன்று சேர்ந்து ஏக மனதாக இந்தத் தீர்மானத்தை முறியடித்தார்கள். இப்படி நாட்டின் பாதுகாப்பிற்கு ஒத்துவராத கருத்துகளை காந்திஜி வலியுறுத்தியதால்தான், தேசத்தந்தை என்று அவரை ஒருபுறம் ஏற்றுக் கொண்டாலும், மற்றொருபுறம் அவர் காட்டிய வழியை எவரும் பின்பற்றவில்லை.

அவருடைய அரசியல் கருத்துகள் நாட்டிற்கு எந்தளவிற்கு ஒத்துவரவில்லையோ, அந்தளவிற்கு அவருடைய பொருளாதார கருத்துகளும் நாட்டின் தேவைகளுக்கு ஒத்துவராமல் போய்விட்டன. அவர் எளிமையான வாழ்க்கையை ஆதரித்தார். வேட்டி கட்டினார், பேண்ட் அணியவில்லை. பெரும் அரசியல் தலைவராக இருந்தபோதும்கூட அதற்கேற்ற வீடுகளில்லாமல் அரசியல் வேலையாக டெல்லிக்கு வந்தால், ஹரிஜன சேரிகளில்தான் தங்குவார். சைவ உணவை வலியுறுத்தினார். கனரக தொழிற்சாலைகளை அவர் ஆதரிக்கவே இல்லை. கிராமப்புறங்களில் செய்கின்ற குடிசைத்தொழில்களைத்தான் அவர் ஆதரித்தார். இவையெல்லாம் நம் நாட்டு மக்களுக்கு ஒத்துவருமா என்றெல்லாம் அவர் சிந்திக்கவே இல்லை. அலுவலகங்களுக்குச் செல்கின்றவர்கள் இக்காலக்கட்டத்தில் பேண்ட் அணிந்துதான் செல்கின்றனர். பண்டிகை மற்றும் விஷேச நாட்களில்தான் வேட்டி அணிகின்றனர். மேலும் காந்திஜிபோல் எளிமையான வாழ்க்கையை எவரும் வாழ விரும்புவதில்லை. நாட்டில் எல்லோரும் நிறைய சம்பாதித்து, வசதியான வீடு, கார், ஏ.சி., அறுசுவை விருந்து என்று வாழப்பிரியப்படுகிறார்கள். காந்திஜியோ எங்குச் சென்றாலும் பாதயாத்திரையாகத்தான் செல்வார். ஆனால் நம் நாட்டில் மக்கள் இதற்கெல்லாம் ஒத்துக் கொள்வார்களா? வீதிகளில் வாகனங்கள் நிரம்பி வழிகின்றன. ஸ்கூட்டர், கார் லோன் என்று மக்கள் லோன்போட்டு வாகனங்களை வாங்குகிறார்கள். இப்படி மக்கள் வசதியை நாடும்போது காந்திஜி அவர்கள் வலியுறுத்திய எளிமையான வாழ்க்கை எப்படி மக்களுக்கு ஏற்புடையதாக இருக்கும்.

காலத்திற்கு ஒத்துவராத கொள்கைகளையும், கருத்துகளையும் காந்திஜி அவர்கள் வலியுறுத்தியதால்தான், அரசும்



சரி, மக்களும் சரி அவர் காட்டிய வழியில் நடக்காமல் தவறிவிட்டார்கள். ஆனால் தேசத்திற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தது அவர்தான் என்பது மறுக்க முடியாத உண்மையாக இருப்பதால், இதுவரை அந்தளவிற்காவது நன்றியறிதலோடு நடந்து கொள்கிறார்கள்.

2. *அரசாங்கத்தில் ஊழல் மலிந்துள்ளதாக மக்கள் குறை சொல்லும்போது அதே ஊழலை அதிகமாகச் செய்யும் அரசியல் கட்சிகளையே ஏன் மீண்டும் மீண்டும் தேர்தலில் தேர்ந்தெடுக்கிறார்கள்?*

இந்த முரண்பாடு வாழ்வில் நல்லதும் கெட்டதும் சேர்ந்துவரும் என்பதற்கு நிரூபணமாகிறது. ஒன்றின்மூலம் வரும் நல்லதை மனதில் வைத்துக் கொண்டு நாம் அதை ஏற்றுக் கொள்ளும் பொழுது அதோடு வரும் கெட்டதைத் தவிர்க்க முடியாமல் போய்விடுகிறது. இது வாழ்வில் எல்லா இடங்களிலும் வரும். நாட்டை நிர்வாகம் செய்ய அரசாங்கம் தேவைப்படுகிறது என்னும்பொழுது அரசாங்கம் வேண்டும் என்கிறோம். அதேசமயத்தில் அரசாங்கம் செய்ய வருபவர்கள் ஊழலில் ஈடுபடும்பொழுது தாங்க முடியவில்லை என்றும் மக்கள் புலம்புகிறார்கள். இதற்கு நல்ல உதாரணம் வேண்டும் என்றால் திருமணத்தையும், பெண்களையும் எடுத்துக் கொள்ளலாம். திருமணத்தை நாடாத பெண்களே இந்தியாவிலில்லை. அதேசமயத்தில் அதனால் தன் மகிழ்ச்சி குறைந்தது என்று குறை கூறாத பெண்களே இல்லை. திருமணத்தால் தன் மகிழ்ச்சியைத் தொலைத்து விட்டதாகக் கூறும் பெண்மணிகள், தான் பெற்ற பெண் திருமண வயதை எட்டும்போது காலாகாலத்தில் அந்தத் திருமணத்தை முடித்து வைக்க வேண்டும் என்று துடிக்கிறார்கள். உங்கள் சந்தோஷம்தான் திருமணத்தால் கெட்டது என்று சொல்கிறீர்களே பின் ஏன் அந்தத் தவற்றை உங்கள் பெண் வாழ்க்கையில் செய்கிறீர்கள், அவளைச் சுதந்திரமாக இருக்க விடுங்களேன் என்றால், அதெல்லாம் பார்த்தால் முடியுமா? நல்லதோ, கெட்டதோ அவளுக்கென்று ஒரு குடும்பம் வேண்டும்

என்பார்கள். ஆக இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? திருமணத்தின் வாயிலாக பலவிதமான தொல்லைகள் வந்தாலும், ஆணின் பாதுகாப்பு பெண்ணிற்குப் பெரிதாகத் தெரிவதால், அவள் எந்தவிதமான தொந்தரவையும் பொறுத்துக்கொள்ள தயாராக இருக்கிறாள் என்று தெரிகிறது. இம்மாதிரி நிலையில்தான் நாம் அரசையும் மக்களையும் வைத்துப் பார்க்க வேண்டும். நிர்வாகத்திற்காக அரசாங்கத்தை நாடும்பொழுது வேண்டாவெறுப்பாக அதனுடன் ஊழலும் வந்துவிடுகிறது.

இரண்டாவதாக நாம் வேறொன்றையும் கருத வேண்டும். அரசாங்க அதிகாரிகளுக்குக் காசு கொடுத்து தம் தவறான நோக்கத்தை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் பலபேருக்கு இருக்கிறது. எத்தனையோ பேருக்கு வருமானவரி, வணிக வரி கொடுக்க இஷ்டமே இல்லை. கட்டட விதிகளை மீறி வீடு கட்டிக்கொள்ள எத்தனையோ பேர்கள் ஆசைப்படுகின்றனர். பள்ளி, மருத்துவமனை, தொழிற்சாலை முதலியவைகளை நடத்துபவர்கள் இவர்களுக்கு எல்லாம் விதிமுறைகளை மீறி செயல்பட்டு ஆதாயம் பார்க்க நிறைய சந்தர்ப்பங்கள் வருகிறது. அவ்வாறு கிடைக்கும் ஆதாயத்தை, விட மனம் இல்லாத-பட்சத்தில் அரசாங்க அதிகாரிகள் கண்டுகொள்ளாமல் இருக்கச் செய்வதற்கு இவர்கள் காசு கொடுப்பதை வழக்கமாகச் செய்கிறார்கள். இப்படிக் குறுக்கு வழியில் ஆதாயம் தேடுபவர்-களின் எண்ணிக்கையைப் பார்த்தால், முறையாக வாழ விரும்புவர்களைவிட இவர்கள்தான் அதிகமாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு அரசாங்க அதிகாரிகளோ, அல்லது அரசியல்வாதிகளோ செய்யும் ஊழல் வேலைகள் தவறாகவே கண்ணிற்குத் தெரியாது. ஊழல் செய்யும் அரசியல்வாதிகள் இவர்கள் கண்ணிற்குப் பெரிய சாதனையாளர்களாகத்தான் தெரிவார்கள். இந்த உண்மையை வைத்துப் பார்க்கும்பொழுது ஊழல் செய்யும் கட்சிகளுக்கு அதிகமாக ஓட்டு விழுவது என்பது மக்களிடையே அவர்களுக்குக் கிடைத்த அங்கீகாரத்-தையும் காட்டுகிறது என்று நாம் அறியலாம்.

மூன்றாவதாக நம் நாடு வறுமையிலிருந்து மீண்டு வளர்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும் நாடு என்பதை நாம்



உணர வேண்டும். மக்களுடைய ஆசைகளும் தேவைகளும் கட்டுக்கடங்காமல் பெருகிவிட்டன. இருபதாயிரம் வருமானம் பார்க்கக் கூடிய ஒருவருக்கு 50,000/-க்குமேல் வருமானம் பார்க்கக்கூடிய ஒருவர் வாழும் வாழ்வைத் தானும் வாழ வேண்டும் என்ற ஆசை வந்துவிடுகிறது. **Two wheeler**-தான் வைத்துக் கொள்ள முடியும் என்ற நிலையில் உள்ளவர் கார் வைத்துக் கொள்ள ஆசைப்படுகிறார். வாரம் ஒரு நாள்தான் நல்ல அசைவ உணவு செய்ய முடியும் என்ற நிலையிலிருப்பவர் தினமும் அதேபோல் அசைவ உணவு சாப்பிட பிரியப்படுவார். பிள்ளைகள் கேட்பதை எல்லாம் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படாத பெற்றோர்களே இல்லை என்று சொல்லலாம். இதற்கெல்லாம் கிடைக்கின்ற வருமானம் வழி செய்யாதபட்சத்தில் கையிலிருக்கும் அரசாங்க அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி மேல்வரும்படி பார்க்க எத்தனையோ பேர் துணிந்து விடுகிறார்கள். ஆகவே வருமான பற்றாக்குறை என்பது ஊழலுக்கு மிகப் பெரிய தூண்டுகோலாக அமைந்து-விடுகிறது என்பதையும் நாம் கருத வேண்டும். சுபிட்சம் நிறைந்த அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் அரசாங்க ஊழியர்கள் இந்த அளவிற்கு ஊழலில் ஈடுபடுவதில்லை. ஏனென்றால் அவர்களுக்குக் கை நிறைய வருமானம் கிடைப்பதால் ஊழலில் ஈடுபட வேண்டிய அவசியம் இல்லாமல் போகிறது. பொதுமக்களும், பணப்பற்றாக் குறையினால் வரும் கஷ்டங்களை உணர்ந்தவர் என்பதால் அரசாங்க ஊழியர்கள் செய்கின்ற ஊழல்களை ஏற்புடையது என்றே விட்டுவிடுகிறார்கள்.

மேற்கூறிய கண்ணோட்டங்களை வைத்துப் பார்த்தால், ஒரு புதிய உண்மை இப்போது இந்திய அரசியலில் அறிமுகமாகிறது. ஊழலற்ற ஆட்சியை தருவோம் என்று வாக்குறுதிகளை அள்ளி வழங்குவது அரசியல் கட்சிகளுக்கு ஒன்றும் புதிதே அல்ல. அப்படி வாக்குறுதி வழங்கினாலும் ஆட்சிக்கு வந்து விட்ட பிறகு கொடுத்த வாக்கிற்கு எதிர்மாறாக நடந்து கொள்வதும் ஒன்றும் புதிதல்ல. இப்படிப்பட்ட சூழ்நிலையில் "ஆம் ஆத்மி" கட்சிக்கு டெல்லியில் கிடைத்துள்ள அமோக வரவேற்பு ஆச்சரியம் தருவதாக அமைந்துள்ளது. நாட்டின் தலைநகரில்

மத்தியில் ஆட்சி செய்யும் ஆளுங்கட்சியை ஓரம் கட்டிவிட்டு 70 சீட்டு கொண்டுள்ள சட்டசபையில் 67 இடங்களைப் பிடித்திருப்பது என்பது மிகவும் பாராட்டக் கூடிய ஒரு விஷயம்தான். நடைமுறையில் இந்த "ஆம் ஆத்மி" கட்சியினர் தாம் சொல்லியபடி செய்கிறார்களா, "ஆம் ஆத்மி" கட்சி அமைக்கும் மந்திரி சபையில் இடம் பெற்றுள்ள மந்திரிகள் யாரும் ஊழலில் சிக்காமல் இருக்கிறார்களா என்பதையும் நாம் பார்க்க வேண்டும். அவர்கள் சொல்லியபடி செய்து தம் பெயரை காப்பாற்றிக் கொண்டார்கள் என்றால் இந்திய அரசியல் வாழ்வில் அது ஒரு பெரிய திருப்பு முனையாக அமையும். டெல்லியில் இவர்களுக்குக் கிடைத்த வரவேற்பு மற்ற மாநிலங்களிடமும் கிடைத்ததென்றால் அது நம் நாட்டின் தலையெழுத்தையே மாற்றிவிடும்.

3. *தமிழர்களும், வங்காளிகளும் மிகுந்த மதப்பற்றுடையவர்கள். கடவுள் நம்பிக்கைக் கொண்டவர்கள். அப்பட்சத்தில் இதே தமிழர்களும், வங்காளிகளும் கடவுளே இல்லை என்று நாத்திகம் பேசும் தி.மு.க விற்கும், கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் எப்படி ஓட்டுப் போட்டார்கள். இந்த முரண்பாட்டை எப்படி நாம் புரிந்து கொள்வது?*

தமிழர்களின் மத ஈடுபாடு மேலோட்டமானது என்று நாம் சொன்னால், 1967-இல் தி.மு.கவினர் நடத்திய நாத்திக பிரச்சாரம் தமிழர்களின் மதப்பற்றைக் கலைத்து, அவர்களை நாத்திகர்களாக மாற்றி, தி.மு.க.வினருக்கு ஓட்டுப் போட வைத்தது என்று நாம் பேசலாம். ஆனால் இத்தகைய கூற்று உண்மையே இல்லை. ஏனென்றால், தமிழர்களின் மதப்பற்று மிகவும் ஆழமானது. அவர்களுடைய ஜீவனில் இரண்டறக்கலந்தது. 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் எழுந்தருளியுள்ள புண்ணிய பூமி இது. பல நாயன்மார்கள் நிகழ்த்தியுள்ள அற்புதங்களை படிக்கும்போது நமக்கு மெய் சிலிர்த்துப் போகிறது. இப்படி நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்களோடு தமிழர்களின் ஆன்மிகம் நிற்கவில்லை. இவர்களைப் பின்பற்றி பட்டினத்தார், வள்ளலார், ரமணர் போன்ற மகான்களும் அவதரித்துள்ளனர். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல்



பகவான் ஸ்ரீ அரவிந்தரும், அன்னையும் தமிழர்களிருக்கும் புதுச்சேரிக்கு வந்துள்ளார்கள். புதுச்சேரி பழங்காலத்தில் அகத்திய முனிவர் குடியிருந்து தவம் புரிந்த வேதபுரி என்றொரு நகரமாகக் கருதப்படுகிறது. ஆகவே ஆன்மிகம் இந்தளவிற்கு ஊறியிருக்கும் போது தி.மு.க.வினரின் நாத்திகப் பிரச்சாரத்தால், இந்த மத ஈடுபாடு கெட்டது என்று நாம் சொல்வதற்கில்லை. அப்படியானால் தமிழர்கள் தி.மு.க.வினரை ஆதரித்தது எதைக் காட்டுகிறது என்றொரு கேள்வி எழுகிறது.

தி.மு.க. பிரச்சாரத்தில் பல அம்சங்கள் அடங்கியுள்ளன. அந்தப் பல அம்சங்களில் நாத்திகமும் ஒன்று. உண்மை என்னவென்றால், அந்த நாத்திகம் மக்களின் மனத்தைக் கவரவில்லை. மக்களைக் கவர்ந்தது என்னவென்றால், தி.மு.க.வினர் அந்தணர் ஆதிக்கத்தைக் கண்டித்துப் பேசியதும், மத்திய அரசின் ஹிந்தி திணிப்பை எதிர்த்துப் பேசியதும்தான் ஆகும். இந்த இரண்டு விஷயத்திற்குத்தான் மக்களிடமிருந்து அவர்களுக்கு வரவேற்பு கிடைத்ததே தவிர கூடுதலாக வந்த நாத்திகத்தை அவர்கள் பொருட்படுத்தவில்லை. இதை ஏன் நான் கூறுகிறேன் என்றால் அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில்கூட கோவில்களில் பக்தர்களின் வருகையோ, உண்டியல் காணிக்கையோ, மதம் சம்பந்தப்பட்ட திருவிழாக்களோ எதுவுமே குறையவில்லை. தி.மு.க.வினர்தான் நாத்திக பிரச்சாரம் செய்தார்களே தவிர தலைவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள் வழக்கம்போல கோயில்களுக்குச் சென்றுகொண்டுதான் இருந்தனர். குடும்பத் தலைவர்களும் அதைத் தடுத்ததாகத் தெரியவில்லை.

(தொடரும்)

## ஜீவிய மணி

*வேதத்தை மனிதன் இன்னும் அறியவில்லை. உச்சகட்ட உயர்வை மனிதன் ஆரம்பத்திலேயே எட்டி விட்டான். மனித குலம் அதைப் பெற நாளாகிறது. பெறாத பகுதியில் நாம் உள்ளோம்.*

# நிதானம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

*நிதானம் சத்தியத்தின் அஸ்திவாரம்.* அது முடிவான பலனைக் கொடுப்பதைக் காணவும் ஒரு நிதானம் தேவை. நிதானம் நித்ய தரிசனம். பணம் சிலருக்குப் பரம்பரையாக முக்கிய பண்பாக வருவதுண்டு. எந்தக் காரியத்தைச் செய்தாலும் அதற்கென்ன செலவாகும், என்ன பலன் வரும், பணத்தைப் போட மனம் இடம் தருமா என நினைப்பார்கள். அப்படிப்பட்டவரிடம் எதைச் சொன்னாலும் முதற்கேள்வி “என்ன விலை” என்பார்கள். பணம் இவர்களது மூலம், மூலஸ்தானம், முக்கியம், உயிர் மூச்சு. அவர்கள் பணத்தைக் கருதுவது போல் பதவியை, ஜாதியை, குடும்பப் பண்பை, படிப்பின் உயர்வைக் கருதுபவருண்டு. *இவர்களைப் போல் நாம் நிதானத்தின் மூலம் உலகையறிய முயன்றால் நிதானம் ஜீவனின் அடியில் மழை நீர் பூமிக்கடியில் சேர்வது போல் சேரும்.* வழிந்தோடும் நீர் விரயம் என நினைக்கலாம். பூமிக்கடியிலிருந்து அது வெப்பத்தைத் தணித்து நம் உடல் வேக்காட்டால் எழும் வியாதிகளால் சிரமப்படுவதைத் தடுக்கும் என நாம் அறிய வேண்டும். நீர் பூமிக்கடியில் சேர்வதைப் போல் நிதானம் ஜீவனுக்கடியில் சேர்ந்தால் மனம் பக்குவம் பெறும். பக்குவம் பவித்திரமானால் மனிதன் சாது **(Sage)** வாவான். அறிவின் வளர்ச்சி ஆன்ம விழிப்புத் தரும்பொழுது நூறு புத்தகத்தைப் படித்துப் பெறும் ஞானத்தை முதற்புத்தக சாரம் மூலம் அறிவான். ஏராளமான விஷயம், விபரம் குறள் போல சுருங்கினால் எளிய மனிதனுக்கு விளக்கம் தேவை. சாதுவுக்குக் குறள் விளங்கும். *குறளும் தேவையின்றி நேரடியாக அந்த ஞானத்தைப் பெறுபவர் சாது. சாது* **Supreme**-*ஐ அடையக்கூடியவர்.* மனம் மூலம் **Supreme**-க்கு உயர்பவர் சாது. இதய உணர்வால் **Supreme**-ஐ அடைபவர் மகான் **(Saint)**. சாது, மகான் ஆகியவர்கள் நிதான புருஷர்கள். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பது சாதுவின் சித்தி. பெரியதானாலும் அது மனம் பெற்ற உயர்வு என்பதால், ஒரு



கட்டம் தாண்டி ஆட்டம் காணவல்லது. அது மகானுக்கில்லை, மகா புருஷனுக்குமில்லை. பட்டேல் கோர்ட்டில் வாதிக்கும் பொழுது மனைவி இறந்ததாகத் தந்தி வந்தது. வாங்கிப் படித்து விட்டுப் பையில் போட்டு வாதத்தைத் தொடர்ந்தார். இது சரியா, தப்பா என்பதைவிட இதைச் செய்யத் தேவைப்படும் நிதானம் கிடைத்தற்கரியது. மூர்ச்சை போடும் விஷயம் வந்தும் நிதானத்துடன் செயல்படுபவர் சாதுவாக, மகானாகக் கூடியவர்.

நிதானத்தை நிதானமாக அறிவதே அறிவது. எதற்கும் மறுபுறம் உண்டு. நிதானம் தவறுவதைக் கண்டால் நிதானத்தின் அவசியம் புரியும். இது ஏராளம் என்பது உண்மை. பிறரிடம் காண்பவை பெரிய உதாரணம். *நம் அனுபவம் முடிவானது.* இருபது வருஷமாக அடிக்கடி வெளியூர் பயணம் செய்த பொழுதும், இன்னும் ரயிலில் போக நேர்ந்தால் இரண்டு மணி முன் நிதானம் தவறுகிறது, டென்ஷன் வருகிறது எனக் கண்டபொழுது பசி பழக்கமாவதால் நிற்பதில்லை என்பது போல் நிதானம் தவறாமலிருப்பது சிலருக்குப் பழக்கத்தால் குறையுமே தவிர அழியாது என்று அறியும்பொழுது, விஷயம் சிறியது எனினும் முக்கியத்துவம் வாய்ந்தது என அறிகிறோம். நெருப்பு பழக்கத்தால் சுடாமலிருப்பதில்லை என்பது போல் நிதானம் அடிப்படையில் எளியதல்ல, அடிப்படை பெரியதான அம்சமுடையது எனக் காண்கிறோம். தீய சக்திகள் தங்கள் காரியத்தை நிறைவேற்றிக்கொள்ள முதற்காரியமாக கரண்டை நிறுத்துவது வழக்கம். வாதம் நடக்கும் பொழுது கோர்ட்டில் எதிரியிடமிருந்து உண்மையை வாங்க முயல்பவர் முதலில் அவன் கோபத்தைக் கிளறி நிதானத்தை இழக்க முயல்வார். *நிதானம் போன பின் உளறுவது வழக்கம்.* அன்பர் ஒருவர்மீது பொறாமையால் கோள் சொல்லி தொந்தரவு கொடுக்க ஆறு ஆண்டுகள் செய்த சதிகள் பலிக்கவில்லை. முதலாளிக்கு நெருக்கடியான நேரம் வந்ததை அன்பரின் எதிரிகள் பயன்படுத்திக் கொண்டனர். அன்பர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார். முதலாளிக்குத் தான் செய்வது சரியில்லை எனத் தெரியும். அன்பர் நிதானமே உருவானவர். உத்தரவை நிதானமாகப் பெற்று வீடு திரும்பினார். முதலாளிக்கு முகம்

பேயறைந்தது போலாயிற்று. ஆடி விட்டார், நடுங்கினார். அன்பரை அழைத்துப் பேசினார். அன்பர் சந்தோஷமாக நிதானமாகப் பேசிய பொழுது முதலாளி முகம் சுருங்கி, உடல் குன்றினார். "நம்மில் ஒருவர் வேலையை அடுத்தவர் எடுத்து விட்டார் என ஒருவர் நம்மைக் கண்டு அறிந்தால் உங்கள் வேலையை நான் பறித்தேன் என அவர் நினைப்பாரல்லவா?" என அன்பர் கேட்டார். வேலை நீக்கும் உத்தரவு வாபஸ் செய்யப்பட்டது. சதி செய்த இருவர் ராஜினாமாச் செய்தனர். *நிதானம் போரைவிட சக்தி வாய்ந்தது*. தானத்தில் சிறந்தது நிதானம்.

விக்கல் பொதுவாக வந்தால் ஆயுள் முடிந்து விட்டது எனப் பொருள். உடலில் தும்மலைக் கட்டுப்படுத்த முடியாது. இருமலைக் கட்டுப்படுத்தலாம். ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தினால் உடலின் சில பழக்கங்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பது பழமொழி. அவை சமர்ப்பணத்திற்குக் கட்டுப்படும். எண்பது வயதைக் கடந்தவருக்கு விக்கல் வந்ததால் அனைவரும் அதுவே முடிவு என்றறிந்து அவரை வந்து பார்த்து விட்டுப் போனார்கள். அன்பர் ஒருவர் வந்தார். அவரருகில் நின்று அன்னையை அழைத்தார். அன்றிரவு விக்கல் நின்றது. அவர் அதன்பின் பதினாறு வருஷமிருந்தார். விக்கலைக் கட்டுப்படுத்தும் நிதானம் உடலுக்கில்லை. உடல் அதை முடிவு எனக் கொள்கிறது. உலகம் முடிவு எனக் கொள்வது சமர்ப்பணத்திற்கு முடிவாகாது. அது பலிக்க அன்பருக்கு நிதானம் தேவை.

பொருள் தொலைந்தால் நிதானம் மறையும். நிதானம் மீண்டும் வரும்வரை பொருள் கிடைக்காது. நிதானமிழந்த பலரிடை ஒரு மகான் பெயரைக் கூறினால் குழப்பம் மறைந்து அனைவரும் நிதானம் பெறுவர். அது மகானுடைய பர்சனாலிட்டியாகும். பொருள்களைப் பதமாகவும் மனிதர்களை இதமாகவும் நடத்துகிறோம். இதம் கனிந்து உயர்வது இங்கிதம். இவை மூன்றும் சேர்ந்தது பக்குவம். பக்குவம் தூய்மையானால் பவித்திரமாகும். இறைவனை மட்டும் நம்பி செயல்படுவது



தூய்மை எனப்படும் என்கிறார் அன்னை. சிவனடியார் பிள்ளையைக் கறி சமைக்கச் சொன்னபொழுது அடியார் நிதானத்தை இழக்கவில்லை. சிவலிங்கத்தின் கண்ணில் குருதி வழிந்தபொழுது கண்ணப்பன் செய்தது எதுவும் பலன் தரவில்லை என்றபொழுது கதிகலங்கினார். "ஒரு வேளை என் கண்ணைத் தந்தால் உதிரம் வழிவது நிற்குமா?" என நினைத்த பொழுது அடியார் நிதானமிழக்கவில்லை. தன் கண்ணை லிங்கத்தில் பதித்தபின் வழியும் குருதி நின்றது கண்ணப்பனுக்கு ஆனந்தம் தந்தது. அடுத்த கண்ணில் குருதி வழிந்த பொழுது கண்ணப்பனுக்குக் கவலை வரவில்லை. மருந்துதான் தெரியுமே என மகிழ்ந்தார். செயல்பட்டார். இது அடியார் மனநிலை. நிதானத்தைப்பற்றி நினைத்தாலும் பேசினாலும் நிதானம் வரும்.

**Life** என்ற பத்திரிக்கையின் ஆசிரியருக்குப் பென்சிலின் ஷாக் வந்தபொழுது அவருடலின் செல்கள் சாவதை அவர் உணர்ந்தார். நிதானத்தைக் கைவிடவில்லை. "நான் இறக்க சம்மதிக்க மாட்டேன்" என முடிவு செய்தார். மரணத்துடன் போராடினார். இவர் போராட்டத்தை உடல் சட்டை செய்யவில்லை. கால்கள் உயிரிழந்தன. மரணம் இதயத்தைத் தொட்டவுடன் இதயம் துள்ளி எழுந்து மரணத்தை உதறித் தள்ளியது. போன உயிர் இதயத்தைச் சுற்றி ஓரளவு மீண்டும் வந்தது. தைரியம் வந்து தொடர்ந்து வேகமாகப் போராடி உடல் முழுவதும் மரணம் அழிந்து ஜீவன் வந்தது. அன்னை இதைப் படித்துவிட்டு சத்திய ஜீவியம் இங்குச் செயல்பட்டது என்றார். உயிர் போனபின் போராட தைரியம் அபரிமிதமாக வேண்டும். அந்தத் தைரியத்தின் அஸ்திவாரம் நிதானம். இது போன்றவர் ஆன்மிக ஹீரோ எனப்படுபவர். அன்னை அவர் மன உறுதியைப் பாராட்டினார். பெற்ற தாய் விஷம் வைத்தால் பிள்ளைக்கு நிதானமிருக்குமா? அம்பாலால் புராணி ஆஸ்ரமத்தில் 1923 முதல் 1965 வரை இருந்தவர். இவர் 1918-இல் பகவானைச் சந்தித்து இந்திய விடுதலைக்காக பயங்கரவாதமான போராட்டம் நடத்துவதைப் பற்றிக் கேட்டார். 1904-இல் பகவான் இந்தியாவுக்குப் பூரண சுதந்திரம் வேண்டுமென்றார். 1906-இல் அரசியலில் பகவான் சேர்ந்தார். 1909-இல் சூட்சும உலகில்

இந்தியா சுதந்திரம் பெற்றதை இறைவனிடமிருந்து கேட்டார். பகவானுடைய தம்பி பாரீன்குமார் கோஷ் வெடிகுண்டு செய்து வீசி தூக்கு தண்டனை பெற்று பிறகு ஆயுள் தண்டனையாக ஜெயில் வாசம் செய்தவர். புராணிக்கு வெடி குண்டில் நம்பிக்கையுண்டு. பகவான் “பயங்கரவாதம் தேவைப்படாது” என்றார். புராணி “என்னால் தூங்கவே முடியவில்லை” என்றார். இந்தியா போராட்டமின்றி சுதந்திரம் பெறும் என பகவான் கூறிய அன்றிரவு புராணி முதன் முறையாகத் தூங்கினார். *நாடு அடிமையாக இருக்கும்பொழுது தேச பக்தனுக்கு நிதானமிருக்காது. தூங்கவும் முடியாது.*

நிதானம் எவருக்கும் வரும். *நிதானம் எவருக்கும் தவறும்.* சமர்ப்பணத்தால் அதிக நிதானம் பெறலாம். பூரண யோகத்திற்கு எல்லா முறையும் உதவும். ஏனெனில் அதற்கு எந்த முறையும் தேவையில்லை. பகவான் ஹத, ராஜ யோகங்களை மூன்று நாட்களில் செய்தவர். அதன்பின் அவருக்குச் சத்திய ஜீவியம் போக “குரு” காலால் தலையில் எட்டி உதைக்க வேண்டியிருந்தது. பகவான் இது ஒரு சிறு செய்யுளில் வேறொருவர் அனுபவமாக எழுதுகிறார். நான் அதை அவர் நம்மிடம் கூறாததாகக் கொள்கிறேன். அவருக்கு குரு இல்லை. ஆரம்பத்தில் கிருஷ்ணனைக் குருவாகக் கொண்டார். பிறகு குரு இல்லை. அசரீரியின்படி செய்தார். பிறகு அதையும் புறக்கணித்தார். நாம் அவரைப் பின்பற்ற முடியாது. அவர் சொல்லியதைப் பின்பற்றலாம். அவருக்கும் நிதானம் தவறியது. காலை முறித்துக் கொண்டார். நம் போன்றவர்க்கும் நிதானம் வரும். வருவதும் தவறுவதும் வேறு நிலைகளில். *பூரண சமர்ப்பணம் பரிபூரண செம்மையாக* **(perfection)** *இல்லாவிட்டாலும், ஒரு நாள் அதாவது இருபத்தி நான்கு மணி செய்ய முடியும்.* இதைச் சமர்ப்பணத்திற்காக அல்லாமல், நிதானத்திற்காகச் செய்யலாம். அன்று நிதானம் அதிகபட்ச மனநிலையில் உயர்வதையும், குறைந்தபட்சத்தில் தவறுவதையும் காணலாம். எங்கு உஷாராக இருக்க வேண்டும், எங்கு நம் முயற்சி முழுமையாக இருக்க வேண்டும் என்பதை அவை காட்டும். எல்லா நிலைகளிலும் அவ்விரு அம்சங்களைக் கண்டால் எந்த நேரமும் இரு



முனைகளிலும் எப்படிச் செயல்பட வேண்டும் எனத் தெரியும். இதற்கு **Yogic self awareness** யோக சுய விழிப்பு என இதைக் கூறலாம். *இந்நிலையில் யோகம் பலன் கருதாமலிருக்கும்.* வாழ்க்கைப் பலனைக் கருதாவிட்டால் மனத்தில் யோக பலனிருக்கும். எதுவுமே இல்லாத பரவசமும் சிறிது நேரம் இருக்கும். *யோகம் நம்மிடமிருந்து யோகத்திற்கும் போகும்.* யோகம் தானே தன்னைச் செய்து கொள்ளும். அன்னையே நம்முள் யோகம் செய்வது அடுத்த கட்டம். பிரியமான கணவன் ஒரு கட்சியில் சேர்ந்து தலைவரின் கவனத்திற்குப் பாத்திரமானால், அவர் மனைவி உங்கள் மனதில் இனி நானில்லை, உங்கள் தலைவரிருக்கிறார் என்று அறிவாள். மனம் ஒருவருக்கே இடம் தரும். பலருக்கு இடம் தரும் மனம் மனத்தைக் கடந்த நிலையை எட்டியது.

துப்பறியும் சாம்பு கதைகள் ஐம்பது. சாம்புவுக்குப் பதினேழு வருஷ சர்வீஸுக்குப் பின் நாற்பத்தி மூன்று ரூபாய் சம்பளம். அவருக்குத் துப்பறிவது பலித்தவுடன் வேலை போய் விட்டது. பலன் பெற்ற முதலாளி வேலையிலிருந்து எடுத்து விட்டார். இது என்ன சட்டம் - சட்டம் மட்டமானால், மட்டம் தரும் பலன் தண்டனையாகும். இந்தத் தண்டனை தொழில் பரிசு. அப்பரிசு வரும்பொழுது தண்டனை தந்தவர் பரிசு தரும் விழாவை நடத்துவார். மரபு வாழ்வை பேயாகவும், அதன் சிகரமான பெண்ணாகவும், கர்மமாகவும் கண்டது. வாழ்வால் பயன் பெறும் அளவுக்கு அந்நாளில் மனம் வளரவில்லை. கடல் உயிரை எடுக்கும். கப்பலோட்டுபவனுக்குக் கடல் சமுத்திர-மாகப் பெரும் பலனைப் பேரளவில் தரும். கத்தி கையை வெட்டும். கத்தியைப் பயன்படுத்தினால் காயம் நமக்கில்லை. நாம் செய்யும் வேலைக்கு. மரபு வாழ்வுக்குப் பணிந்து விலகி-யது. பூரண யோக சாதகனுக்கு வாழ்வு விரும்பிப் பணியும். வாழ்வு மாயையில்லை. பிரம்மத்தின் ஜீவிய சக்தியான **Consciousness** ஜீவியம். வாழ்வை அறியும் மனிதனுக்கு வாழ்வு பிரம்ம ஜீவியத்தைக் காட்டும். **US**-இல் உள்ள மகன் சிகரெட் பிடிக்கிறான். அவனுக்கு சிகரெட் விடுதலை தர தாயார் **TV** பார்ப்பதைக் கைவிட்டார். மகன் சிகரெட்டை மறந்தான்,

**Obama**-வும் சிகரெட்டை விட்டு விட்டார். அன்னை பிரபஞ்ச சக்தி என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

பெரும் தோல்வி நிதானமிழக்கச் செய்யும். பெரும் வெற்றியும் அப்படிச் செய்யும். தோல்வியில் நிதானமிழந்தவன் அதனால் மீண்டும் எழும் வாய்ப்பை இழக்கிறான். வெற்றியால் இழந்த நிதானம் வெற்றியை தோல்வியாக்கும். விதிவிலக்குண்டு. *அன்னையின் சாம்ராஜ்யத்தில் அத்தனையும் விதிவிலக்காகும்*. கடுகளவு நம்பிக்கையுமில்லாத குரு, சிஷ்யன் அதே விஷயத்தில் மலையளவு சாதித்ததைக் கண்ட நேரம், கடைசி நிமிஷம். *அதே கடுகு அன்று குருவுக்கு மலை போலிருந்தது கொசுராக வந்தது*. சிஷ்யனின் சந்தோஷம் குறும்பாகி செல்லமாகக் குருவின் தாடையில் தட்டினான். அது பலத்த அடியாக விழுந்தது. 14 ஆண்டுகள் "சிறைவாசம்" அச்செயலால் விடுதலையளித்தது. 99% சாதகமாக முப்பத்தி ஒன்றாம் நாள் நடந்த கேஸ் முப்பத்தி இரண்டாம் நாள் இலஞ்சத்தால் தோற்றபொழுது தோற்றவரால் சிரிக்க முடிந்தது. அச்சிரிப்பு தூக்கத்திலும் பீறிட்டுக் கொண்டு வந்தது. அப்பீல் முடியுமுன் கேஸ் ஜெயித்தது. நிதானம் பெரியது. அன்பருக்கு நிதானத்தை இழப்பது அதனினும் பெரியது. சாவித்ரி எமனை வென்றாள். வென்றவள் காலனை அழித்தாள். சத்தியவான் உயிர் பெற்றுத் திரும்பினான். இறைவன் சாவித்ரிக்கு சுவர்க்கம் தர முன் வந்தான். *சாவித்ரி இறைவனை எதிர்த்து மறுத்தாள்*. தன்னை மறுத்த சாவித்ரியை இறைவன் மறுத்ததற்காகப் பாராட்டி, உலகில் தன் இலட்சியத்தைப் பூர்த்தி செய்யும் பிரதிநிதியாக அவளை அமைத்தார்.

துப்பறியும் சாம்புவில் "இன்ஸ்பெக்டர் கோபாலன்" என்ற கதையில் சாம்புவும் இன்ஸ்பெக்டரும் குற்றவாளியிடம் சிக்கி உயிரிழக்கும் தருவாயில் இன்ஸ்பெக்டர் நிலைகுலையாமல் நிதானமாக இருக்கிறார். கிரிக்கெட் பந்து குற்றவாளியை வீழ்த்துகிறது. நிதானத்தை இழக்காத இன்ஸ்பெக்டர் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு சாம்புவின் உயிரையும் வியாபாரியின் உயிரையும் காப்பாற்றிச் சுட வந்தவனைக் கைது செய்கிறார். நிதானம் வெல்லும். இலட்சிய வேலைகள் பெரும் வெற்றி



பெற்றபின் அடுத்தகட்ட உயர்வை எட்ட அதில் ஒருவர் விரும்பினார். *இலட்சியம் பலித்தது குருவுக்குக் கோபம். இலட்சியம் சிஷ்யனால் பலித்து முழுப்பலனையும் குரு பெற்றார். குருவுக்கு சிஷ்யனை அழிக்க வேகம் வந்தது. சந்தர்ப்பம் எழுந்தது*. குரு விஷமான பொய் சொன்னதால் இலட்சியத்தை அடுத்த கட்டம் எடுத்துப்போக விரும்பியவர்க்குக் கொலை செய்யும் ஆத்திரம் பீறிட்டது. மணி இரவு பதினொன்று. அவர் மனைவி அடுத்த கட்டம் போய் சிஷ்யனிடம் "கொலை விழும், ஒன்றா, இரண்டா எனத் தெரியாது. என்னைத் தொட முடியாது. நான் வலுவானவள், தொட்டால் தொடுபவர் மரணமடைவார்" என்றாள். உடனே சிஷ்யர் ஒரு மைலுக்கு அப்பாலுள்ள குருவிடம் போனார்! உங்கள் விஷமம் கொலையில் முடிகிறது. நீங்களே வந்து மன்னிப்பு கேளுங்கள் என்ற பொருள்படும்படி, "வாருங்கள் வெளியே, சொல்வதைக் கேளுங்கள். நான் சொல்வதைக் கோபக்காரனிடம் கூறுங்கள்" என்றார். குரு அடங்கி, சுருங்கி, பணிந்து சொன்னபடி செய்தார். ஆறாம் மாதம் சிஷ்யனுக்கு 14 வருஷ சிறை தண்டனையிலிருந்து விடுதலை கிடைத்தது. கொலை விழுவது க்ஷணத்தில். அந்த நேரம் நிதானம் எப்படி வரும். ஒரு மைல் போய் ஒரு மைல் திரும்பும்வரை கொலை செய்யும் ஆத்திரம் அடங்குமா? *ஒருவருடைய நிதானம் அனைவரையும் கட்டுப்படுத்தும்*. கொலை செய்யும் கோரமும் அடங்கும். நிதானத்தை நாடுபவர் அடுத்தவர்க்குத் தன் விஷயத்தில் சுதந்திரம் தர வேண்டும். அடுத்த வீட்டார் குழந்தையைக் கயிற்றில் கட்டி கிணற்று நீரின் ஆழம் பார்த்த பெண் மனம் மனித சுபாவம். தன் விஷமமான ஆசையைப் பிறர் உயிர் போகும் விஷயத்தில் சுதந்திரமாகப் பரிசோதனை செய்வது இலட்சிய மனித சுபாவம். **Bank** பணத்தைப் பிரமேயமில்லாமல் கறுப்புப் பணமாக்கி, அதைக் கணக்கில் எழுதியவர், அதற்குப் பதில் சொல்ல வேண்டிய நண்பர் வேறு என அறிந்து செய்தவர். இவரை இலட்சியமானவர் என உலகம் போற்றும்.

(தொடரும்)

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

அன்றாட வாழ்க்கையில் நாம் அன்னையின் செயலை எல்லா இடங்களிலும் பார்க்கலாம். **Silent will** மனோசக்தி, மௌனத்திற்கு உள்ள சக்தி என்பதை அன்னை விளக்கியிருக்கிறார். சுருக்கமாகச் சொன்னால், ஒருவரிடம் நாம் ஒரு விஷயமாகப் பேசும்பொழுது நாம் நம் கருத்தை விளக்கிக் கூறுவதைவிட, கூறாமலிருக்கப் பழகிக் கொண்டால் இந்த மனோசக்தி செயல்படும் என்பதேயாகும். நாலு பேர் சந்தித்துப் பேசும்பொழுது ஒவ்வொருவரும் தத்தம் கருத்தைத் தெரிவிக்க ஆர்வத்தோடு முயல்வதை நாம் காணலாம். நாம் அங்கிருந்தால் நமக்கு அதுபோன்ற ஆர்வம் இருப்பதைக் காணலாம். அந்த ஆர்வத்தைக் கட்டுப்படுத்தி மௌனமாக இருந்தால் அந்த மௌனத்தின் மூலம் நம் எண்ணம் செயல்படும் என்பதே கருத்து. ஹார்மன் என்று ஓர் அமெரிக்க ஆபீசர். நூறு கோடி ரூபாய் **turnover** கம்பெனியில் **Vice President**-ஆக இருக்கிறார். இவர் ஒரு புத்தகம் எழுத முன்வந்தார். அதற்குப் பல பெரிய கம்பெனிகளைப் பற்றி ஏராளமான விபரங்கள் தேவைப்பட்டன. அவற்றிற்கெல்லாம் கடிதமெழுதினார். எந்தக் கம்பெனியும் பதில் போடவில்லை; நேரில் போய்ப் பார்க்கலாம் என்று ஒரு கம்பெனிக்குச் சென்றார். இது ஆயிரம் கோடி ரூபாய் **turnover** உள்ள கம்பெனி. ஹார்மன் இந்தக் கம்பெனித் தலைவர், உபதலைவரிலிருந்து ஆரம்பித்து, கடைசிச் சிப்பந்திவரை ஒரு 10 பேரை **interview** செய்ய வேண்டும். கம்பெனிக்குப் போய் ரிசப்ஷன் மானேஜரைப் பார்த்தார். அவர் "நீங்கள் நினைப்பது நடக்காது, போகலாம்" என்று சுருக்கமாக முடித்துவிட்டார். ஹார்மன் தம் புத்தகத்தைப் பற்றியும், அதனால் இந்தக் கம்பெனிக்கு என்ன பலனிருக்கும் என்றும் விளக்கினார். மானேஜர் எதையும் காதில் வாங்கவில்லை. ஏன் தமக்கு **interview** கொடுக்க வேண்டும் எனச் சில அரிய கருத்துகள் அவர் மனதிலிருந்தன. அவற்றை விளக்கிச் சொன்னால் பலனிருக்கும் என ஹார்மனுக்கு அளவுகடந்த ஆர்வம். தம்மையும் மீறி கருத்துகள் மனதில் வரிசைப்படுத்திக் கொண்டு வெளிப்படத் துடிக்கின்றன. அப்பொழுது ஹார்மன் **silent will** என்ற கருத்தை நினைவுபடுத்திக்கொண்டு சோதனை செய்ய எண்ணினார். இவரது எண்ணத்தைப் புறக்கணித்துவிட்டு, மேற்சொன்ன கருத்துகள் முந்துகின்றன. பிரம்மப் பிரயத்தனம் செய்து தம் கருத்துகளைப் புறக்கணித்தார்; வெற்றி கண்டார். அரை நிமிஷத்தில் மானேஜர் பேச ஆரம்பித்தார். ஹார்மனுடைய முதல் கருத்தைக் கூறி "பார்க்கலாம்" என்றார். ஹார்மனால் தம்முள் பொதிந்து கிடக்கும் கருத்து வரிசையைப் புறக்கணிக்க முடியவில்லை. அரை நிமிஷத்தில் தம் கண்ணெதிரே கண்ட ஆச்சரியத்தை நம்ப முடியவில்லை. போராட்டம் அவரை உலுக்கியது. அவர் திணறிக் கொண்டே இருக்கும்பொழுது மானேஜர் ஹார்மன் மனதிலுள்ள இரண்டாம் கருத்தைத் தாமே சொல்லி, "நீங்கள் சொல்வதும் சரிதான்" என்றார். ஹார்மனுக்கு ஆச்சரியம் அதிகரித்ததைப் போலவே கருத்து முந்திக்கொள்ளும் மனப்போராட்டமும் மேலிட்டது. ஒவ்வொன்றாக மானேஜர், ஹார்மன் மனதில் உள்ள எட்டு கருத்துகளையும் சொல்லி, முடிவாக 10 **interview** ஏற்பாடு செய்வதாகச் சொன்னார். இதுவே நாம் நம் மனதை அடக்குவதால் ஏற்படும் பலன். அன்னை இதை **silent will** என்கிறார்கள். மௌன சக்தி என நாம் கூறலாம். மனத்தை அடக்குவது, புலன்களைப் புறக்கணிப்பது, உணர்ச்சி-களைக் கட்டுப்படுத்துவது போன்றவை உயர்ந்த செயல்கள். வாழ்க்கையில் பெரும்பலன் தரக்கூடியவை. அன்னை பக்தர்களுக்குப் பெறற்கரிய பெரும்பலன்களைத் தொடர்ந்து பெற்றுக் கொடுக்கக்கூடியவை.

ஓர் அரசியல் செல்வாக்குள்ள தாலுக்கா ஆபீஸ் குமாஸ்தாவுக்கு ஒரு பெண். அந்த ஊர் தலைமை ஆசிரியருடைய குடும்பமும், இவருடைய குடும்பமும் நெருங்கிய நண்பர்கள். ஆசிரியருக்கு 9 பிள்ளைகள். எல்லோரும் பட்டதாரிகள். ஒருவர் இந்தப் பெண்ணை

தகப்பனாரின் செல்வாக்குக் கருதி மணக்க விரும்பினார். அவர் சாது. போஸ்டாபீஸ் குமாஸ்தா. அதிகம் பேச மாட்டார். அவர் தம்பி பட்டதாரி ஆசிரியர். அதே காரணத்திற்காக அவரும் அந்தப் பெண்ணை விரும்பினார். ஒருவர் மனம் மற்றவர்க்குத் தெரியாது. தம்பி அந்தப் பெண்ணின் வீட்டிற்கு அடிக்கடி சென்று அவளைச் சந்தித்துப் பேசுவார். பெண்ணின் தகப்பனாருக்குச் சந்தோஷம். பெண்ணுக்கு அந்த வீட்டிலிருந்து ஏதாவது ஒரு பிள்ளையை மணம்புரிய அவருக்கு அவா. அண்ணன், தம்பியின் கருத்து தெரிந்தவுடன் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டார். வெளி மாநிலத்திற்கு மாற்றலாகிப் போய்விட்டார். திருமணம் செய்ய வேண்டிய நேரம் வந்ததும் திருமண ஏற்பாட்டை **church**-இல் செய்வதற்கு முன் தகப்பனார் முறைக்காக பெண்ணையும் ஒரு வார்த்தை கேட்கலாம் என்று நினைத்தார்; கேட்டார். பதில் வேறு மாதிரி வந்தது. "எனக்கு சின்னவரைப் பிடிக்காது, பெரியவரைப் பிடிக்கும்''. ஊரே அதிசயப்பட பெரியவருக்கே பெண்ணைக் கொடுத்தார்கள். பெரிய உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார் மாமனார். **I.A.S.**-உம் வாங்கிக் கொடுத்தார். கலெக்டராக ரிடையர் ஆனார் பெரியவர்.

மௌனத்தின் சக்தி பெரியது. மனதிலுள்ளதைக் கட்டுப்படுத்துவது ஒரு வகை மௌனம். எந்தத் தகுதியிருந்தாலும், எதையும் கனவிலும் கருதாமலிருக்கக்கூடியது உயர்ந்த மௌனம். ஒரு பக்தர் வெளியூரிலிருந்து ஆசிரமம் வருபவர். எல்லாத் தரிசன நாள்களைவிட ஸ்ரீ அரவிந்தர் சமாதியான நாள் அவருக்கு முக்கியமான நாள். அன்றைய தினம் தவறாமல் வருவார். அன்றுள்ள அமைதி ஆஸ்ரமத்தில் மிகவும் சிறப்பானது. அன்றைய தினம் சமாதியைச் சுற்றித் தியானம் நடக்கும். ஸ்ரீ அரவிந்தர் இருந்த காலத்தில் அவருக்கு நேரடியான சேவை செய்த சாதகர்களில் ஓர் 20 பேருக்கு அன்னை அன்றைய தினத்தில் ஸ்ரீ அரவிந்தருடைய கட்டிலுக்கு அருகில் அமர்ந்து தியானம் செய்யும் பாக்கியத்தை அளித்திருந்தார். அந்த வெளியூர் பக்தருக்கு ஆசிரமத்தைப்



பற்றி எந்தச் செய்தியும் தெரியாது. அதுபோல் இந்த ஏற்பாடும் அவருக்குத் தெரியாது. ஒரு டிசம்பர் 5-ஆம் தேதி தியான மண்டபத்தில் அன்று குறிப்பிட்ட சாதகர்கள்தாம் உட்கார முடியும். இவர் தியானத்திற்கு வந்தார்; தியான மண்டபத்திற்கு வெளியே உட்கார்ந்தார். இவரைத் தெரிந்த முதிய சாதகர் ஒருவர் இவரை அன்று அழைத்துப்போய் ஸ்ரீ அரவிந்தரின் அறையில் உட்காரவைத்து "இங்கேயே தியானம் செய்'' என்று சொல்லி, அமர்த்திவிட்டு வந்தார். இதுவும் ஒரு **silent will** ஆகும். கேட்காமலிருத்தல் என்பது வேறு, வெளியிட முடியாத பேராசை என்பது வேறு. கேட்காமலிருப்பது என்பது ஓர் உயர்ந்த மனத் திண்மையிருந்து வருகிறது. மற்றது தம் பேராசையை மற்றவர்கள் தெரிந்துகொண்டால் கேவலமாயிற்றே என்ற வெட்கத்தால் ஏற்படுவது. கேட்காமலிருப்பவர்களைக் கேட்டால், தாமே கிடைத்த பெரிய பேறுகளை வரிசையாகச் சொல்வார்கள். மனதைக் கட்டுப்படுத்த முடியாமல் கேட்பவர்கள், பலமுறை வற்புறுத்திக் கேட்பவர்களைக் கேட்டால், கேட்டுக் கிடைக்காமற்போன நீண்ட பட்டியலைச் சொல்வார்கள்.

சிலர் "நான் வேண்டியதைக் கேட்பேன். கேட்டபொழுதெல்லாம் கிடைத்திருக்கிறது'' என்பார்கள். அவர்கள் வலிமையுள்ள உள்ளம் உடையவர்கள். இவர்களுக்கு இது சரி. இவர்களும் கேட்காமலிருக்கப் பழகிக்கொண்டால் இதைவிடப் பெரும்பலன் அடைவார்கள்.

சிலர் "நான் ஒவ்வொரு முறையும் கேட்கிறேன். எப்பொழுதும் கிடைப்பதில்லை. எதுவும் கேட்டுக் கிடைத்ததில்லை'' என்பர். இவர்கள் ஆசைக்குட்பட்டவர்கள். இவர்கள் கேட்பதை நிறுத்தினால் இப்பொழுது கிடைக்காதது கிடைக்கும்.

சிலர் "நான் எதையும் கேட்பதில்லை. வேண்டியதெல்லாம் கிடைக்கிறது'' என்பர். இவர்களே மௌன சக்தியைப் பிரயோகம் செய்பவர்கள்.

சிலர் "நான் எதையும் கேட்பதேயில்லை. எதுவுமே கிடைத்ததும் இல்லை'' என்பர். இவர்கள் திறமையற்றவர்கள்.

இவர்கள் ஓரளவு தகுதியைப் பெற்றபின் கேட்க ஆரம்பித்தால் கிடைக்கும்.

20 பாக்டரிகள் உள்ள ஒரு தொழிலதிபருடன் ஒரு பாக்டரி உள்ளவர் 'கூட்டாளி' என்ற பெயரில் பழகியவர். இந்தப் பெரிய முதலாளி தம் 40 வருட வாழ்க்கையில் தம் **technology**, விற்பனை உரிமை, **(trade sheets)**, தொழில் ரகசியங்கள், எதையுமே தம் உறவினர்கட்குக்கூட சொல்லியதில்லை; கொடுத்ததில்லை. இந்தச் சின்ன முதலாளி அவருக்கு எல்லாச் சேவைகளையும் செய்வார் - எதையும் கேட்காத குடும்பத்தில் பிறந்தவர். 10 ஆண்டுகள் கழிந்தன. பெரியவர், சின்னவருக்கு ஒன்று ஒன்றாய் கொடுக்காதவற்றை எல்லாம் தாமே கொடுக்க ஆரம்பித்தார். சின்னவர் 5 வருட காலத்தில் பெரியவருக்குச் சமமாக வந்துவிட்டும், இன்னும் சேவைதான் செய்வார்; எதையும் கேட்கமாட்டார்.

கைரசீதுகூட இல்லாமல் ரூ.150 சம்பளக்காரரிடம் 1960-இல் 12,500 ரூபாயைக் கொடுத்தவரை உலகமே எச்சரித்தது. அவர் ரசீதும் பெறவில்லை; பணத்தையும் கேட்கவில்லை. பணம் தானே அவர் வீடு தேடி வந்தது. எவருமே நம்பவில்லை. பணத்தைக் கொடுத்தவருக்கு அன்னை துணை. கேட்காமலிருந்த தன்மை அன்னைக்குக் கருவி.

சிறியவர்கள், பெரியவர்கள், படித்தவர்கள், படிக்காதவர்கள், எல்லோரும் தன்னையறியாமல் இந்த முறையைப் பல சமயங்களில் கையாளுகிறார்கள். பொதுவாகத் தம் கருத்தை வெளியிட முடியாத நிலைமைகளில் அவர்கள் மௌனத்தைக் கடைப்பிடிக்கின்றார்கள். அதற்கும் உரிய பலன் உண்டு. தம்மால் தம் கருத்தை வெளியிடச் சந்தர்ப்பம், உரிமை, சலுகை முழுமையாக இருக்கும்பொழுது மனக் கட்டுப்பாட்டில் கருத்தை வெளியிடாமல் இருப்பது சிறப்பு. சிறந்த பலன் அளிக்கும். அவர் அன்னையின் பக்தரானால் அன்னை செயல்பட உதவியாக இருக்கும்.

இதன் தத்துவம் என்ன? சென்னையிலிருந்து விழுப்புரம் செல்லும் ரயில் செங்கல்பட்டில் ஏறுபவர், 'நம்ம ரயில்



எப்பொழுது வரும்' என்கிறார். ரயில் பொதுவானது. பிரயாணிகளுடைய உடைமை இல்லை. ஆனால் பேச்சுவழக்கு அப்படி அமைந்துள்ளது. அதேபோல் 'என் எண்ணம்' என்று நாம் கருதும் எண்ணம் பல வருஷங்களுக்கு முன் தோன்றி, பலர் மனதில் உதித்து, உலவி வருகிறது என்பதே ஆத்மீக உண்மை. ஸ்ரீ அரவிந்தர் யோகப் பயிற்சியை மேற்கொண்ட போது மகாராஷ்ட்ரா யோகி விஷ்ணு லீலீ அவரை "உட்கார்; கண்ணை மூடிக்கொள்; எண்ணங்கள் வெளியிலிருந்து உன் மனதில் புகுவதைப் பார்ப்பாய்" என்றார். ஸ்ரீ அரவிந்தர் தம் தியானத்தில் அந்த உண்மையைக் கண்டார். எண்ணங்கள் உலகில் உலவுகின்றன; ஒருவர் மனதில் புகுந்து வெளிப்படுகின்றன; அவரை வெளிப்படுத்தத் தூண்டுகின்றன; வெளிப்படத் துடிக்கின்றன என்பதுதான் அடிப்படை உண்மை. ஒருவர் தம் மனதில் தோன்றிய எண்ணத்தை வெளியிட மறுத்தால், அந்த எண்ணம் அதை ஏற்றுக்கொள்வதில்லை. மற்றொருவர் மூலம் வெளிப்படுகிறது. இதுவே மௌன சக்தியின் தத்துவமாகும்.

தம் மனதில் தோன்றிய எண்ணங்களெல்லாம், ஒன்று தவறாமல், ஒரு காலத்தில் இல்லாவிடில் மற்றொரு காலத்தில் உலகத்தில் நிறைவேறியுள்ளன என ஸ்ரீ அரவிந்தர் கூறுகிறார்.

அன்னையின் பக்தர்கள் அனுபவபூர்வமாய்க் கண்டதும், உண்மை என அன்னையால் விளக்கம் அளிக்கப்பட்டவை கீழ்க்காண்பவை.

**(i)** அன்பர் பிரார்த்தனை ஆசிரமக் கட்டடத்தினுள் வந்து சேர்ந்த அதேசமயம் பூர்த்தியாகிறது; **(ii)** விஷயம் முடிந்த பிறகு செய்த பிரார்த்தனையும் ஓர் அபூர்வமான வழியாகப் பூர்த்தியாகிறது; **(iii)** ஒரு கடிதம் எழுதி அன்னைக்கு அனுப்பாமல் வீட்டிலேயே வைத்துவிட்டாலும் எழுதியதற்குப் பலனாக, பிரார்த்தனை பலிக்கிறது; **(iv)** கடிதம் அன்னைக்குக் கிடைத்து, அவர் படித்தமாத்திரத்தில் பலன் கிடைக்கிறது; **(v)** கடிதத்தை அன்னை படிக்காவிட்டாலும் பலன் கிடைக்கிறது;

**(vi)** அன்னை ஒரு காலத்தில் உங்களைப் பற்றி ஒரு விஷயத்தைச் சொல்லி, பின்னர் அவர் அதை மறந்துவிட்டாலும் பலிக்கிறது.

இவைபோல் பல வகையான பிரார்த்தனைகள் பல கட்டங்களில் பூர்த்தியாகின்றன. அங்கெல்லாம் செயல்படுவது மனோசக்தியே ஆகும்.

அன்னையை ஏற்றுக்கொண்ட கொஞ்ச நாட்களுக்குப்பின் இவையெல்லாம் அன்பர்கள் வாழ்க்கையில் வெவ்வேறு அளவில் செயல்படுகின்றன. அன்பர்கள் 'நான் நினைத்தவை எல்லாம் நடக்கின்றன', 'பல விஷயங்களை நினைக்கிறேன், முக்கியமானவை பூர்த்தியாகின்றன', 'தற்செயலாக அப்படிச் சொன்னேன். பிறகு பலித்து விட்டது' என்றெல்லாம் அடிக்கடி சொல்வதுண்டு. வாக்கும், மனமும் தூய்மையாக இருந்தால், அந்தத் தூய்மை வழியாக அன்னை செயல்படுவதை இவை குறிக்கும்.

திறமைமிக்க இளைஞரான இன்ஜினீயர் அற்புதமான தொழிலில் சம்பளத்திற்கு வேலை செய்துகொண்டிருந்தார். கம்பெனி அவரிடம் கொடுத்த மெஷின் ரூ.௪0,000. அவர் கம்பெனிக்கு மாதம் ரூ.௪0,000 சம்பாதித்துக் கொடுத்துக்-கொண்டிருந்தார். பெருந்தன்மையுள்ள இளைஞர். தம்மிடம் ரூ.௪0,000 இருந்தால் தானே அவ்வளவு சம்பாதிக்கலாம். மாமனுக்கு ௪0 பஸ்கள் ஓடுகின்றன. உதவி கேட்டுப் பழக்கமில்லாதவர். சென்னையில் உள்ள ஓர் இன்ஜினீயரிங் கம்பெனிக்கு ஒரு நாள் வழக்கம்போலப் போயிருந்தார். லேசாகப் பழக்கமான ஒருவர் இவரிடம் வந்து கைகுலுக்கி 'என்னுடன் பார்ட்னராக உங்களுக்குச் சம்மதமா? உங்களையும், உங்கள் தொழிலையும் நான் அறிவேன். தேவையான மூலதனத்தை நான் கொடுக்கிறேன்' என்று வலிய வந்து கேட்டார். அவருக்கு 1 கோடிக்கு மேல் சொத்து. அவருடைய அண்ணன் ஒரு மாநில முதலமைச்சராக இருந்தார்.

(தொடரும்)



## அன்பர் அனுபவம்

G. மகேஷ் குமார்

நான் ஒரு தனியார் பள்ளியில் பணிபுரிந்து கொண்டிருந்தேன். அப்பள்ளியில் தினமும் காலையில் கூட்டுப் பிரார்த்தனை நடைபெறும். பள்ளி மாணவ மாணவியர், ஆசிரியர்கள், பள்ளி அலுவலக ஊழியர்கள் என அனைவரும் பிரார்த்தனையில் கலந்து கொள்வார்கள். ஆகையால் அதற்கான ஏற்பாடுகள் செய்வதும், பார்த்துக்கொள்வதும் எனது பொறுப்பாக இருந்தது.

பிரார்த்தனையின் போது ஒரு ஆசிரியை, விசும்பி அழுது பிரார்த்திப்பதைக் காண நேரிட்டது. மேலும் இது ஒரு வார காலமாகத் தொடர்ந்தது. அவர் staff ரூமில் தனியாக இருந்த போது, வெளியில் பொய்யான சந்தோஷத்துடனும், உள்ளே மிகுந்த மனவருத்தத்துடனும், பிரார்த்தனையின் பொழுது அழுவதையும் நான் கவனித்ததைக் கூறியதும், கண்கலங்க ஆரம்பித்து விட்டார்.

*பின் அவர் கூறியவை:*

எங்களது குடும்பத்தில் நான்கு பெண்கள். மூத்தவள் நான். எனது தந்தை, கடைசி தங்கை பிறந்த அடுத்த மாதமே இறைவனடி சேர்ந்தார். எங்கள் நால்வரையும் படிக்க வைத்து, திருமணம் செய்து வைத்தது எங்கள் அம்மாதான்.

எங்கள் வீட்டில் அனைவரும் பெண்கள் என்பதால், எங்கள் வீட்டைச்சுற்றி இருந்தவர்கள், எங்கள் வீட்டை "லேடீஸ் கிளப்" என்றுதான் அழைப்பார்கள்.

எனக்குத் திருமணமாகி ஒரு பெண் குழந்தை இருக்கிறாள். எனது முதல் சகோதரிக்கும் பெண் குழந்தைதான். கடைசி இரு சகோதரிகளும் எங்கள் வீட்டுக்குப் பிரசவத்திற்காக வந்துள்ளார்கள். அவர்களது கணவரும், புகுந்த வீட்டாரும், "ஆண் குழந்தை பிறந்தால் மட்டும் நீங்கள் இங்கு வரலாம். இல்லையென்றால் தாய் வீட்டாருடன் நீங்கள் இருந்து விடுங்கள்" என்று கண்டிப்புடன் சொல்லிவிட்டார்கள்.

எனது மனக்கலக்கதிற்குக் காரணம் எங்கள் குடும்பத்தில் ஈரேழு தலைமுறைகளாக உள்ள சாபம் ஆகும். அச்சாபம்

என்னவென்றால், எங்கள் வீட்டின் பெண்களின் கணவர்கள் அவர்களை விட்டுச் சென்றுவிடுவார்கள் அல்லது திருமணமாகி சில வருடங்களிலேயே இறந்து விடுவார்கள். எனது கணவரும் என்னை விட்டுவிட்டு இறைவனடி சேர்ந்து விட்டார்.

இதற்கு விமோசனம் வேண்டியும், பரிகாரம் தேடியும், வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள ஜோதிடரிடம் ஓலைச் சுவடி பார்ப்பதற்காகச் சென்றோம். ஓலைச்சுவடி வாயிலாகக் கிடைத்த விஷயம் என்னவென்றால், சாப விமோசனம் பெற, 108 பசுக்களைத் தானம் செய்ய வேண்டும். மேலும் 48 கோவில்களுக்கு கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டார் அந்த வயதான ஜோதிடர். இந்தக் கடினமான பரிகாரம் காரணமாகவே நான் மிகுந்த மனவருத்தத்தில் உள்ளேன் என்று முடித்தார் அந்த ஆசிரியை.

இதைக் கேட்டபின் நான் அன்னையிடம் பிரார்த்திக்கும் பொழுது அந்த ஆசிரியையின் குடும்பத்திற்காகவும் பிரார்த்தனை செய்தேன். "அன்னையின் அருள்" புத்தகத்தை எனது மேஜை டிராவில் வைத்திருப்பேன். ஓய்வு நேரங்களில் எடுத்துப் படிப்பது எனது வழக்கம். உடல் நலக் குறைவு காரணமாக நான் ஒரு வாரம் பள்ளிக்குச் செல்லவில்லை. பிறகு பள்ளிக்கு வந்த போது, எனது மேஜையில் வைத்திருந்த அன்னையின் அருள் புத்தகத்தைக் காணவில்லை. மனம் பதற்றம் அடைந்தது. வழக்கம் போல் தினசரி பிரார்த்தனைக்குச் சென்றேன்.

பிரார்த்தனை முடிந்ததும் அந்த ஆசிரியை என்னிடம் வந்து, ஏன் இவ்வளவு டென்ஷன் ஆக இருக்கிறாய் எனக்கேட்டார். அவரது முகம் தெளிவாகவும் அவர் சந்தோஷத்துடனும் இருப்பதைக்கவனித்தேன். எனது புத்தகம் காணாமற்போனதைச் சொன்னேன். "கவலைப்படாதே, நான்தான் அந்த புத்தகத்தை எடுத்துச் சென்றேன். ஸ்ரீ அன்னை மற்றும் ஸ்ரீ அரவிந்தர் யார் என்பதைப் படித்து அறிந்துகொண்டேன். நீ என்னை அவர்களின் தியான மையத்திற்கு அழைத்துச் செல்லவேண்டும்" என்றார்.

அன்று மாலையே பள்ளி முடிந்ததும் நான் அவர்களை ஸ்ரீ அன்னை அரவிந்தரின் தியான மையத்திற்கு அழைத்துச்



சென்றேன். அங்குத் தியானம் செய்தபின் அவர் சொன்னது, எனது 40 வருட வாழ்க்கையில் முதன்முறையாக இத்தகைய மன அமைதியை உணர்கிறேன் என்றார்.

பின் தியான மையத்தில் இருந்த நூல்களைப் பார்த்தவர், பரம்பொருள் புத்தகம் பார்த்தவுடன், தனக்கு வேண்டும் என மூன்று பாகங்களையும் வாங்கினார்.

அதன்பின், அவர் 3 மாதமாக பள்ளிக்கு வரவில்லை. பிரசவத்திற்கு வந்த தங்கையைக் கவனித்துக் கொள்ள வேண்டி விடுப்பில் இருந்தார்.

மூன்று மாதம் கழித்து, அந்த ஆசிரியை மிகுந்த மகிழ்ச்சியுடனும், கை நிறைய இனிப்புடனும் வந்தார். தனக்கு அரசாங்க வேலை கிடைத்துவிட்டதாகவும், மேலும் அவரது தங்கைக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதாகவும் கூறினார்.

அன்று மாலையே அவர்கள், பகவான் ஸ்ரீ அரவிந்தரையும் ஸ்ரீ அன்னையையும் தரிசிப்பதற்காக தியான மையம் வந்தார்கள். தனது **Govt. Appointment Letter**-ஐயும் ஸ்ரீ அன்னை அரவிந்தர் முன்வைத்து வணங்கினார். பின் அவர் என்னிடம் வந்து, தனக்கு ஏற்பட்ட உன்னதமான அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

- நான் இந்தப் "பரம்பொருள்" புத்தகம் வாங்கியதற்கான காரணம் வைத்தீஸ்வரன் கோவில் ஜோதிடர் கூறிய ஒரு விஷயம்தான். அவர் கூறிய முதல் பரிகாரத்தை எங்களால் நிறைவேற்ற முடியாது என்பதால் இரண்டாவதாக அவர் கூறியது, "அந்தப் பரம்பொருளால் மட்டுமே தங்களின் சாபத்தைப் போக்க முடியும்" என்பதுதான்.
- பரம்பொருள் புத்தகத்தின் முதல் பாகத்தைப் படித்து முடித்தவுடன் எனக்கு அரசாங்க பணி கிடைத்தது. மாதம் வருமானம் ரூ.35,000/- ஆகும். எனது முதல் சகோதரி மீண்டும் கருவுற்றாள் (இவளுக்கு ஏற்கனவே ஒரு பெண் குழந்தை உள்ளது என்பதை முன்பே குறிப்பிட்டேன்).
- பரம்பொருள் புத்தகத்தின் மற்ற இரு பாகங்களையும் படித்து முடிக்கும் தருவாயில் எனது கடைசி இரண்டு சகோதரி-களுக்கும் ஆண் குழந்தை பிறந்தது.

- பிறகு முதல் சகோதரிக்கும் ஆண் குழந்தை பிறந்தது.
- இவை எங்கள் குடும்பத்தை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இருப்பினும் ஆண் குழந்தைகளின் ஆயுளின் பொருட்டு நாங்கள் மீண்டும் வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள ஜோதிடரிடம் சென்றோம்.
- எங்கள் வீட்டில் நடந்த விசயங்களை ஜோதிடரிடம் சொன்னோம். அவர் எங்களிடம் "இந்தச் சாபம் நீங்க என்ன பரிகாரம் செய்தீர்கள்? என்ன தானம் செய்தீர்கள்? எத்தனை கோவில்களுக்கு கும்பாபிஷேகம் செய்தீர்கள்?" என்று கேட்டார். நாங்கள் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை வழிபட்டு வருகிறோம் என்று பதில் சொன்னோம்.
- இதைக் கேட்ட ஜோதிடர் மிகவும் கோபத்துடன் ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை வழிபடும் தாங்கள் ஏன் இந்த ஜோதிடரைப் பார்க்க வந்தீர்கள். அவர்களை வழிபடும் தங்களுக்கு இங்கு வர வேண்டிய அவசியம் கிடையாது. தங்களின் குடும்பத்தின் நிலைமை இனி முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும் என்றார். நாங்கள் எங்கள் மன சாந்திக்காக வேண்டி இங்கு வந்தோம் என்றோம்.
- எங்களது வேண்டுகோளுக்கு இணங்க ஜோதிடர் மீண்டும் ஓலைச்சுவடியை எடுத்து வாசித்தார்.
- *ஓலைச்சுவடியில் இடம்பெற்ற வாக்கியம்:* பரம்பொருளே இப்புவியில் பிறந்து, தனது தெய்வீக வாழ்க்கையைத் தனது எழுத்தாணியால், அயல்நாட்டு மொழியில் எழுதி வெளிப்படுத்தியது.

  அதை நம் தாய் மொழியில், தமிழ்க் கடவுளின் தந்தையான, இந்த உலகத்தைத் தன் கால் கட்டை விரலில் அடக்கி மற்றொரு காலினைத் தூக்கி நிற்கும் கடவுளின் பெயர் கொண்ட ஒரு கர்மயோகி அதை மொழி பெயர்த்து வெளியிடுவார்.

  *பரம்பரையாக வந்த சாபத்தை நீக்கும் தன்மையுடையது பரம்பொருள் புத்தகம்* என்று ஜோதிடர் கூறினார். அவருக்கு நான் பரம்பொருள் புத்தகம் படித்த செய்தி தெரியாது. இது எங்களை வியப்பில் ஆழ்த்தியது.

இதைக் கேட்ட எங்கள் குடும்பத்தினர் புளகாங்கிதம் அடைந்தனர். இவற்றிற்கெல்லாம் நன்றி சொல்லவே, ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தரை தரிசிக்க வந்தேன் என்றார் அந்த ஆசிரியை. மேலும் புத்தக சேவையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள அந்த ஆசிரியை 5 செட் பரம்பொருள் புத்தகத்தை வாங்கிச் சென்றார்.

## ஜீவிய மணி

*எல்லார் வாழ்விலும் உயர்வுண்டு, தாழ்வுண்டு. பிறர் நோக்கில் அவரை அறிவது அன்னைக்குகந்தது. சங்கராச்சாரியார் பெரிய மகான். அவர் கொள்கை அத்வைதம். ஆயிரம் ஆண்டுகளாக இந்தியா பின்பற்றுவது. இவர் இந்தியாவைச் சுற்றி வந்து சதஸ் நடத்தி மற்ற மதங்களை ஆச்சர்யமாக வென்று அத்வைதத்தை நிலைநாட்டினார். இது பெரும் இலட்சியம். இவ்வழியிலுள்ள சிறப்புகள் பல. அவற்றுள் ஒன்று பிறர் கோணத்தில் பிரச்சனையை அணுகுவது. பிறரினிக்கப் பழகுவது. சதஸில் எந்தப் பண்டிதனும் எளிமையில் செயல்பட முடியாது. கூடியுள்ளவர் பெரும்பாலும் பண்டிதர்கள். விஷய ஞானமுள்ளவர், சமயோசிதமாகப் பேசுபவர்கள், ஏக சந்த கிராகிகள், தான் இங்குக் கூறும் சொல்லை - வாதத்தை - எல்லாக் கட்டங்களிலும் முன்கூட்டி பல முறை கருதி, யோசனை செய்து, சோதனை செய்தவர். இவர்களிடையே ஒரு சொல் எடுபட அச்சொல் இவர்களின் அறிவைக் கடந்ததாக இருக்க வேண்டும். அத்துடன் எதிரி நம் சொல்லை ஏற்க வேண்டுமானால், அவன் நம் கருத்தில் தன் கருத்தைக் காண வேண்டும். சதஸில் வெல்பவர்கள் இரு வகை: [1] உயர்ந்தவர் இனிமைக்குப் பேர் போனவர், [2] தாழ்ந்தவர் கடுமையான குதர்க்கமுடையவர். "இன்சொலாலன்றி இரு நீர் வியன் உலகம் வன் சொலால் என்றும் மகிழாதே" என்றுணர்ந்த பண்டிதர் பிறந்த ஊர் மக்களிடம் அவ்வினிமை நிறைந்திருக்கும். கேரளாவில் மான் கொம்பு என்ற ஊருக்கு அப்பெயருண்டு.*

# தெய்வீக ஆனந்தம்

இல. சுந்தரி

ஸ்ரீ அன்னையின் திருமுன் அமர்ந்து கண்ணை மூடியிருந்தாள் உமா. 'கிரேஸ் மதர்' என்று அன்பர்கள் குறிப்பிடும் அந்தத் திருமுகமே அகத்திலும் தெரிந்தது. மனம் இலேசாகி ஓர் உன்னத உணர்வு உற்பத்தியானது. அதைப் பேரானந்தமாக அவளால் உணர முடிந்தது. அந்த முகத்தில் தோன்றும் கனிவு, அந்தப் பார்வையில் தெரியும் மெல்லிய சிரிப்பு, எவ்வளவு அழகு. இந்த அழகும், சிரிப்பும் தூய்மை ஒன்றில்தான் பிறக்க முடியும்.

இந்த ஸ்ரீ அன்னையின் திருவுருவப்படம் அவளுக்குக் கிடைத்ததை நினைக்கிறாள். அவள் தந்தைக்கு இவ்வூருக்கு மாற்றல் உத்தரவு வரும்முன் பழையவூரில் ஒரு பள்ளியில் தற்காலிகமாக இசைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருந்தாள்.

தெய்வீகப்பற்றாலும், தன்னினிய குரல் வளத்தாலும் அனைவரையும் மெய்ம்மறக்கச் செய்து விடுவாள். இவள் இனிய குரலும், இனிய குணமும் மாணவிகளை இவள்பால் ஈர்த்ததில் வியப்பில்லை. வகுப்பு நேரங்கள் தவிர மாணவிகள் இவளையே வளைய வருவதும் பாடல் கற்றுக் கொள்வது-மாயிருந்தனர். "உமா வேலைக்கு வந்ததிலிருந்து பிள்ளைகளுக்குப் படிப்பில் கவனமேயில்லை" என்று இவள் சிநேகித ஆசிரியை இவளைக் கேலி செய்வாள்.

அந்நிலையில்தான் வசந்தி என்ற மாணவி தன் வீட்டில் நடைபெறும் தியானத்திற்கு அழைத்தாள்.

ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் பற்றியும் தியானமையம் பற்றியும் கூறி, அங்கு ஸ்ரீ அன்னைக்கு அவள் இசையைச் சமர்ப்பித்தல் பெரும் பேறு என்று வசந்தி கூறினாள். ஆவலுடன் உமாவும் சென்று தியானக் கூடலில் கலந்து கொண்டாள். ஒரு சகோதரி



தானியற்றிய ஸ்ரீ அன்னை பாடலை உமாவிடம் கொடுக்க அதை உமா அங்கு இறை வணக்கமாகப் பாடினாள். பிறகு சாவித்ரி படித்தல் அன்பர் அனுபவம் கூறல், சிறப்புச் சொற்பொழிவு, தியானம் மலர்ப்பிரசாதம் வழங்கல் என்று யாவும் சிறப்பாக முடிந்தன. அன்றைய கூடலுக்குப் பிறகு ஸ்ரீ அன்னை ஸ்ரீ அரவிந்தர் பற்றி அறிய ஆவல் கொண்டு வசந்தியிடம் கேட்டாள். வசந்தி தன் தந்தையிடம் சொல்லி நிறைய புத்தகங்கள் உமாவிற்கு வாங்கிக் கொடுத்தாள்.

இசைப்பயிற்சி நேரம் தவிர மற்ற நேரங்களில் வீண் பேச்சு ஏதுமின்றி எல்லாப் புத்தகங்களையும் படித்தாள். அந்நிலையில் இவள் தந்தைக்கு இங்கு மாற்றல் உத்தரவு வந்துவிட்டது. எனவே, எல்லோருடனும் அன்புடன் விடை பெற்றாள் உமா. அவரவர்களும் இவளுக்கு ஏதேதோ பொருட்களை அன்புடன் அளித்தனர். வசந்தி தன் பிரிய ஆசிரியருக்கு இந்த 'கிரேஸ்மதர்' லேமினேஷனைப் பாதுகாப்பாக அளித்தாள். தியான கூடத்தில் பார்த்த அந்த மதரின் சிரித்த பார்வையை இவள் எண்ணி எண்ணி மகிழ்வாள். அதே மதர் படம் கிடைத்ததும் ஸ்ரீ அன்னை தன் அன்பை ஏற்று தன்னிடமே வந்து விட்டதாக உணர்ந்து பூரித்தாள்.

புதியவூரில், இப்புதிய வீட்டில் ஓரறையில் அன்னையை எழுந்தருளச் செய்து அமைதியும், தூய்மையும் காத்து அழகிய மலர்களைச் சமர்ப்பித்து தன் பணிகளைத் தொடங்கப் பழகியிருந்தாள். புறத்தில் எத்தனை வேலைகள் இருப்பினும் அன்னை அறையில் அடிக்கடி வந்து தஞ்சம் புகுவது வழக்கம்.

இந்த அறையில் வந்தமர்ந்து சிறிது நேரம் கண்ணை மூடியிருந்தாலும் போதும், அந்த அற்புத முகம் அகத்தில் மலர்ந்து ஆனந்தம் தரும். அன்னையே இந்த அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் நானெப்படி நன்றி சொல்வேன் என்று எண்ணுவாள். இந்த அன்னையின் கண்கள் உயர்ந்த ஆனந்தத்தைப் பொழிவதைப் பலமுறை உணர்ந்திருக்கிறாள். இதன் விளைவு இவளைக் காண நேர்பவர்களுக்குத் துன்பம் விலகி நல்லது நடக்கிறது. இவளிடம் எதைப் பெற்றாலும்

ராசியாக இருக்கிறது என்கிறார்கள். மனம் அமைதியற்ற நேரத்தில் இவள் வந்தால் மகிழ்ச்சியாக இருப்பதாக உணர்கிறார்கள். சிறிது நேரம் இவளுடன் பேசினாலும் மனம் சந்தோஷமாகிறது என்கிறார்கள். இதன் மகிமை மற்றவர்களுக்குத் தெரியாமலிருக்கலாம். இவளுக்குப் புரிகிறது. இவள் அனுபவிக்கும் அன்னை இன்பம் இப்படிப் பரவி மகிழ்வூட்டுகிறது என்று இதைப்பற்றி எவரிடமும் எதுவும் சொல்வதில்லை. ஆனால் அன்னையே! இப்படிக் கருணை பொழியும் உமக்கு நானெப்படி நன்றி கூறுவேன். எங்களை மகிழ்வூட்டும் தங்களை நான் எப்படி மகிழ்வூட்டுவேன் என்று சதா எண்ணிய வண்ணமிருந்தாள். அப்போது அன்றைய பதிவுத் தபாலில் இவள் மாணவி வசந்தி உமாவிற்கு ‘வெள்ளை ரோஜாக்கள்’ என்ற நூலை அன்புடன் அனுப்பியிருந்தாள்.

பொறுமையுடன் பார்சலைப் பிரித்து, கண்ணில் ஒற்றிக்கொண்டு புத்தகத்தைப் பிரித்தவுடன் ஒரு செய்தி கண்ணில்பட்டது. “இறைவனின் பேரானந்தத்தால் நிறைந்திரு, என்னை மகிழ்ச்சிப்படுத்த அதுவே மிகச் சிறந்த வழி” என்றிருந்தது.

தான் ஸ்ரீ அன்னையிடம் கேட்ட கேள்விக்கு உடனே அன்னை பதிலளித்த விதத்தை எண்ணி எண்ணி கண்ணீர் மல்கினாள்.

தனக்கு அடிக்கடி நேரும் இந்த ஆனந்தம் பேரானந்தம் என்று அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். புறக்காரணம் (பணம், புகழ், பதவி, அணிமணிகள்) என்று எது பற்றியுமில்லாமல் திடீர்திடீரென ஓர் ஆனந்தம் உள் நிகழ்வதை அனுபவித்ததுண்டு. அதுபற்றி மேலும் தெளிவு கொள்ள விரும்பி, அன்னையைப் பிரார்த்தித்து, மேலும் அந்தப் புத்தகத்தின் வேறொரு பக்கத்தைப் பிரிக்க, “உள்நோக்கம் ஏதுமின்றி சுயம்புவாக நம்முள் எழக்கூடிய ஒரே உணர்ச்சிப் பெருக்கு பேரன்பாகும். அந்த அன்பிற்குப் பேரன்பைத் தவிர எந்தக் காரணமும் இருக்க வேண்டியதில்லை” என்ற செய்தி கண்ணில்படுகிறது. சொல்லொணா நன்றியுணர்வு சுரந்தது.



இந்த ஆனந்தம் உள்ளெழுவது எப்போதும் நிலைத்திருக்கத் தான் என்ன செய்ய வேண்டும் என்று எண்ணிய போது ‘புஷ்பாஞ்சலி’ என்ற நூலில் படித்த கருத்து நினைவில் எழுந்தது. மலர்கள் இருக்கும் திறனை அதிகப்படுத்தும் தன்மையுடையனவாகவும், இல்லாத அம்சத்தை உற்பத்தி செய்யும் சிருஷ்டி கர்த்தாவாகவும் செயல்படும் என்ற குறிப்புடன் ஓரட்டவணையில், சில மலர்களும் அவை தரும் பலன்களும் குறிப்பிடப்பட்டிருந்ததில் திராட்சை என்ற கனியின் பெயரும் இடம் பெற்றிருந்தது. அது பெற்றுத்தரும் பயனாக ‘தெய்வீக ஆனந்தம்’ குறிப்பிடப்பட்டிருந்தது நினைவுக்கு வர தெளிவு பெற்றாள்.

‘நீ எதை விரும்புகிறாயோ அதை ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்க வேண்டும்’ என்ற கருத்தும் இங்குப் புலப்பட திராட்சை வாங்கி வரலாம் என வெளியே புறப்பட்டாள்.

கடை வீதிக்குப் போகும் முன்பே, அங்கு வழியில் ஒரு மரத்தடியில் ஒரு நடுத்தர வயதுப் பெண்மணி ஒரு கூடையில் திராட்சை பழத்துடன் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தாள். பழங்கள் புதியதாக இருந்தன. அங்கேயே வாங்கிவிடலாம் என்றெண்ணி கூடையருகே சென்று நின்றாள்.

பழக்காரப் பெண்மணியோ இவள் வந்ததைக் கவனியாமல், வியாபார சிந்தனையே இல்லாமல் ஏதோ சிந்தனை வயப்பட்டிருந்தாள். உமா பொறுமையுடன் ஸ்ரீ அன்னையின் திருமுகத்தை எண்ணியபடி நின்றிருந்தாள்.

எதிர்ப்பக்கக் கடையிலிருந்து ஒரு சிறுவன் தெருவைக் கடந்து வந்து “மங்காத்தா தூங்குறியா? யாவாரத்தைக் கவனி. அம்மா எம்மாந்நேரமா நிக்குது?” என்று கூறிச் சென்றான்.

திடீரென உறக்கம் விழித்தது போல் சிந்தனை கலைந்த மங்காத்தா உமாவை நிமிர்ந்து பார்த்து, ‘வா தாயி. ரொம்ப நேரமா நிக்குறியா? ஒரு பேச்சு கூப்பிடக்கூடாதா? ஏதோ ரோசனை, கவல. ஒண்ணும் மனசுல வைக்காத தாயி’ என்று

தன் கவனக் குறைவுக்குப் பணிவாக மன்னிப்புக் கேட்பது போல் பேசினாள்.

“அதனால பரவாயில்லைங்க. உங்களுக்கு என்ன கவலையோ? எதுவாக இருந்தாலும் பொறுப்பைக் கடவுளிடம் விட்டுவிடுங்கள். அவர் உங்கள் கவலையைப் போக்கிவிடுவார். எல்லாம் சரியாகிவிடும்’’ என்று அந்த வேதனைக்குரியவளுக்கு இதம் கூறினாள் உமா.

“இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ வன்சொல் கூறுவது (வழங்குவது)” என்று வள்ளுவர் தெரியாமலா கூறியிருக்கிறார்.

உமாவின் இன்சொல் மங்காத்தாவின் மனப்புண்ணை ஆற்றியது. காலையிலிருந்து ஒடிந்து போன உள்ளம் நிமிர்ந்தது. இவளிடம் மனம் விட்டுப் பேசவும் தோன்றியது.

“தாயி ஒன்னெயப் பாத்தா நல்ல சனமா தோணுது. அதனால எம்மனசு சங்கடத்த ஒங்கிட்ட சொல்லிடறேன் தாயி. தப்பா நெனக்கலன்னா எனக்கு ஒரு வழி சொல்லு தாயி” என்று ஆறுதல் வேண்டிப் பேசினாள்.

“அதனாலென்ன சொல்லுங்க எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன்” என்றாள் உமா அன்புடன்.

“நாங்க மூணு பேரு பக்கத்து கிராமத்திலேந்து இங்கிட்டு வந்து பழயாவாரம் செய்யுறோந்தாயி. மொத்தயாவாரி (வியாபாரி) கிட்ட மூணு பேரும் ஒண்ணாத்தாம் பழம் வாங்குகிறோம். நா கொஞ்சம் தரும நாயம் (தர்மம், நியாயம்) பாக்குறதால அதிக லாபம் சம்பாரிக்கப் பிரியப்படாம கொறஞ்ச வெலைக்கு வித்துப் போடுவேன். சனங்க எங்கிட்ட வாங்கிடறாங்க. எங்கூட வர சரோசாவும், தில்லியும் எம்மேல ரொம்பக் கோபப்படுகிறாங்க. என்னாலதாம் அவங்க யாவாரம் கெடுறதா என்னய ஏசிப் பேசுறாங்க. நாங்கொஞ்சம் பயந்த கொணமா இருக்குறதால என்னெ அடக்குறாங்க. நாந் தெருவுல வியாபாரம் செஞ்சா அவங்களுக்கு நஷ்டம் வருதாம். அதனால நா இந்த மரத்தடியவுட்டு நகரப்படாதுன்னு மெரட்டிட்டுப்



போயிருக்காங்க அவுங்களுக்கு ஆளுபடையிருக்கு. எனக்கு யாருமில்லை தாயி. அதான் கவலையில குந்தியிருந்ததுலே நீ வந்ததையே கவனிக்காம போயிட்டேன். நா என்ன செய்யுறது? சொல்லுதாயி ஒரு வழி சொல்லு” என்று சோகமாய்ப் பேசினாள்.

“நீங்க என்னை நம்பி அன்பா சொன்னதால் நானும் உங்களுக்கு ஒன்று சொல்லலாமென்றால் சொல்கிறேன்” என்று அவள் உத்தரவை எதிர்பார்த்தாள் உமா.

“சொல்லுதாயி கோயில்ல இருக்கற ஆத்தா கணக்கா வந்து பரிஞ்சு பேசுற ஒம்பேச்சை கேக்காம போவேனா. நீங்கள்ளாம் படிச்சவங்க. நல்லது கெட்டது புரியும். எனக்கென்ன தாயி தெரியுது, சும்மா குந்தி வெசனப்படுறேன்” என்று கூறினாள்.

“எனக்கொரு பெரியம்மா இருக்காங்க. அவங்க எல்லாக் கஷ்டங்களும் தீர அழகா வழி சொல்வாங்க. அவங்க சொல்கிறத கேட்கும்போது புரியாது. ஆனால் அதன்படி நடந்தால் நிச்சயம் துன்பம் போய்விடுகிறது. அதை நான் பலமுறை அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். அவங்க சொல்லியிருக்கும் அறிவுரைப்படி ஒரு வழி சொல்கிறேன். செய்து பார்த்தால் உங்கள் துன்பம் தீரும். நம்பிக்கையுடன் செய்ய வேண்டும்” என்றாள்.

“சரி தாயி சொல்லு. அதும்படியே நடந்துக்கிறேன். எனக்கு வம்பு சண்டையெல்லாம் புடிக்காது. எப்பவும் சண்டையன்னா ஒதுங்கி விட்டுக் கொடுத்துடுவேன். அவுங்க ஏசினதுதான் மனசு நோவுது” என்றாள் மங்காத்தா.

“உங்க நல்ல குணத்திற்கு நான் சொல்லும்வழி நிச்சயம் பலிக்கும். நமக்கு யாருடனாவது ஏதாவது பிரச்சனை வந்தால் அவங்க மேல தப்பு காண்பதற்குப் பதிலா நம்மிடம் அதற்குக் காரணம் இருக்கிறது என்று ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மை வரவேண்டும். அடுத்தது பிரச்சனையை நம்ப பக்கமா பாக்காம அவங்க பக்க நியாயத்தைப் பார்க்க வேண்டும். உங்க சிநேகிதிகள் கூடுதல் லாபம் எதிர்பார்க்கிறாங்க. நீங்க கொறச்ச லாபம் பார்க்கிறீங்க. உங்க எண்ணம் நல்லதுதான். ஆனால் அவங்களைப் பொறுத்தவரை அவங்களுக்கு அது இடைஞ்சலா

இருந்திருக்கு. இதை உங்க மனம் ஏத்துக்கிட்டா இந்தப் பிரச்சனையும் இதனால் வந்த வருத்தமும் சுத்தமா நீங்கி விடும். சோதனை செய்து பாருங்க என்று பொறுமையாக கூறினாள் உமா. சரி மா, நீ சொன்னதை நா அப்படியே ஏத்துக்கிடறேன். நா கொறைச்ச விலைக்கு கொடுக்கறதால அவங்க யாவாரம் கெட்டுப் போவுதுன்னு புரிஞ்சிக்கிறேன். அவங்களுக்கு எம்மேல கோபம் வர்றது நாயந்தான்னு ஏத்துக்கிறேன்" என்றாள் மங்காத்தா.

"ரொம்ப மகிழ்ச்சி நான் இப்போ திராட்சை வாங்க கடைவீதிக்கு வந்தேன் வழியில் உங்க கூடையைப் பார்த்ததும் கடைக்குப் போகாமல் இங்கேயே நின்று விட்டேன். திராட்சை கிலோ என்ன விலை? எனக்கு ஒரு கிலோ கொடுங்கள்".

"ஒரு கிலோ நாப்பது ரூவாம்மா" என்று கூறி நிதானமாக ஒரு கிலோ பழத்தை எடையிட்டு பணிவுடன் கொடுத்தாள் மங்காத்தா.

பெற்றுக்கொண்ட உமா, ஒரு ஐம்பது ரூபாய் நோட்டைக் கொடுத்தாள். பெற்றுக் கொண்ட மங்காத்தா "நில்லு தாயி, இதுதான் மொதல்யாவாரம் மீதி பணம் மாத்திக்கிட்டு வந்திடறேன்" என்று எதிர்புற சாலையோரக் கடைக்குப் போகப் புறப்பட்டவளை "நீங்கள் எங்கும் போய் மாற்ற வேண்டாம். இது எங்கவூர்ல ஐம்பது ரூபாய்தான். நீங்க குறைவாய் கேட்டிருக்கீங்க. நீங்களே வைத்துக் கொள்ளுங்கள். நான் போய் வரேம்மா" என்று புன்சிரிப்புடன் விடை பெற்றாள் உமா.

இப்படி அன்புடன் அதிகப்பணமும் கொடுத்து விடை-பெற்றுப் போகும் வாடிக்கையாளர் ஒருவரையும் அவள் இதுவரை பார்த்ததேயில்லை.

"மவராசி! நல்லாயிருக்கணும்" என்று கூறிய வண்ணம் ரூபாய் நோட்டைக் கூடையைச் சுற்றி திருஷ்டி கழித்துத் தன் சுருக்குப்பையில் வைத்துக் கொண்டாள்.

உடனே ஒரு புதிய கார் அருகில் வந்து நின்றது. காரிலிருந்து டிரைவர் இறங்கி என்ன பழம் இருக்கிறது என்று விசாரித்துவிட்டு,



காருக்குள் இருக்கும் தன் முதலாளியிடம் போய், "ஐயா! திராட்சை இருக்கய்யா வெல கேக்கட்டுங்களா?" என்றான்.

கண்ணாடிக் கதவைச் சுழற்றி முழுவதும் திறந்து பழத்தைப் பார்த்தவர், "நல்லாவேயிருக்கு வாங்கிவிடு" என்றார்.

டிரைவர் இவளிடம் வந்து விலை விசாரித்தான் "கிலோ நாப்பது ரூவாதான் ஐயா" என்றாள் மங்காத்தா

"அம்மாடி இம்மாம் வெல சொல்லுறையே கொறச்சுக் குடு" என்று பேரம் பேசினான்.

இவன் பேசுவதைக் கேட்டு முதலாளி வண்டியை விட்டு இறங்கி வந்தார். "என்ன முருகா அநியாயமா விலை கேட்கிறாய்? அவங்களே குறைத்துத்தான் சொல்றாங்க, நம்மவூர்ல இது அறுபது ரூபாய். சரிம்மா நீ நாலு கிலோ கொடு" என்றார்.

மரியாதையுடன் பழத்தை எடையிட்டுக் கொடுத்தாள். இரண்டு நூறு ரூபாய்த் தாள்களைக் கொடுத்து, "பழம் நல்லாவேயிருக்கு வச்சுக்கங்க" என்று அன்புடன் கொடுத்து-விட்டுக் காரில் ஏறினார்.

மங்காத்தாவுக்கு வியப்புத் தாளவில்லை. அந்தப் பொம்பளப் புள்ள வந்த நேரம் இம்மாஞ்சுருக்கா வித்திடுச்சு. கேட்டதைவிட கூடவே கொடுத்தாரு என்று என்றுமில்லா மகிழ்ச்சி பொங்க உமாவின் சாந்தமான முகத்தை நினைக்கிறாள்.

அந்தப்புள்ள சொன்ன வாக்கு பலிச்சிடிச்சு. அவங்க வீடு எங்கேன்னு கூட கேட்டு வைக்கலையே. தெய்வம் கணக்கா வந்தில்ல நல்ல வாக்கு சொல்லிப் போச்சு. மவராசி கையால அதிகமா கொடுத்துது. அதும்படியே மீதியும் வித்திடிச்சு. இத்தினி சுருக்கா யாவாரம் முடிச்சு ஊரு போய்ச் சேந்திருக்கமா? அந்தப் புள்ளய மறுபடி பாக்கணும். அதும் பெரியம்மாவாமே. அவுங்களையும் பாத்து நடந்ததைச் சொல்ல ரொம்ப ஆவலாத்-தானிருக்கு. எங்க பாக்க, எப்படிச் சொல்ல என்று தனக்குத்தானே பேசியவாறு வெற்றுக் கூடையுடன் வீடு திரும்பினாள் மங்காத்தா.

நீண்ட நேரம் கடந்து வியாபாரம் முடித்துவிட்டு வந்த தில்லியும், சரோசாவும், “மங்காத்தா பாவம்! கூடையோடு குந்தியிருக்கும்” என்று பரிதாப உணர்வுடன் அவளைத் தேடி வந்து ஏமாற்றம் அடைந்தனர். “எங்கே போயிருப்பாள்? இங்கேதானே இருக்கச் சொன்னோம்?” என்று வியப்படைந்து எதிர்புற சாலையோரக் கடையில் சென்று விசாரித்தனர்.

“அந்தம்மா கூடையைக் காலி பண்ணி சீக்கிரமா காலையிலேயே போயிடிச்சு” என்றான் கடையாள்.

மிகுந்த வியப்புடன் ஊர் திரும்பினர் இருவரும். மறுநாள், “அவளே தெருவுக்குப் போகட்டும், இந்த மரத்தடி ராசியான இடம் போலிருக்கு. நாம இங்க குந்தி விப்போம். அவ போவட்டும்” என்று இருவரும் முடிவு செய்து மங்காத்தாவை தெரு வியாபாரத்திற்கு அனுமதித்தனர்.

மங்காத்தாவுக்கு ஏகமகிழ்ச்சி. வியாபாரமாவது! இலாப-மாவது! இப்போ அந்தப் பெண்ணைப் பார்த்து அவள் வாக்குப் பலித்த மகிழ்ச்சியைத் தெரியப்படுத்த வேண்டும். அதோடு மட்டுமின்றி அந்தப் பெண்ணின் பெரியம்மாவைப் பார்த்து நன்றி சொல்ல வேண்டும். இனிமேல் ஏதாவது துன்பம் என்றாலும் அவர்களிடம் பேசத் தனக்கு உரிமை வேண்டும் என்று ஆர்வப்பட்டாள் மங்காத்தா.

முதன் முதலில் உமாவிற்கு நன்றி சொன்ன பிறகுதான் பழத்தை விற்க ஆரம்பிக்க வேண்டும் என்று தோன்றியது. ஆனால் எந்தத் தெருவில் எந்த வீட்டில் தேடுவது என்று தெரியாமல், கூடையைத் தலையில் வைத்துக் கொண்டு கூவி விற்காமல் வீட்டைத் தேடிக்கொண்டே முதல் தெருவைத் தாண்டி இரண்டாம் தெருவில் புகுந்து சில வீடுகள் கடந்து விட்டாள். அந்தப் பெண் எந்த வீட்டிலாவது கண்ணில்பட மாட்டாளா என்று மனம் தேடிய வண்ணமிருந்தது.

வீடுவீடாய்ப் பார்த்துக் கொண்டே கூவி விற்காமல் வந்து கொண்டிருந்த இவளை மாடியில் துணி உலர்த்திக் கொண்டிருந்த உமா பார்த்து விட்டாள்.



“பழக்காரம்மா” என்று மங்காத்தாவின் காதில் விழும்படி சற்றுகுரலை உயர்த்தி அழைத்தாள் உமா. அப்பாடா! இந்தக் குரலுக்குரியவரைத்தானே அவள் காண ஏங்கினாள். மனம் மலர்ந்தது. தெருவோரம் கூடையை இறக்கி குரல் வந்த திசையில் பார்வையை உயர்த்தினாள். உமா மலர்ச்சியாகப் படிகளில் இறங்கி வந்தாள். மங்காத்தாவும் நன்றியும், மகிழ்ச்சியுமாக அவளைப் பார்த்தாள். உமா கீழே வந்து கேட்டைத் திறந்தாள். கூடையுடன் உள்ளே நுழைந்தாள் மங்காத்தா.

“அம்மாடி! இதான் ஒங்கவூடா? ஒன்னய பாக்கத்தான் தாயி கூவி விக்காம தேடிக்கிணே வாறேன்” என்றாள்.

“என்னைப் பார்க்கவா?” என்றாள் உமா. “ஆமாந்தாயி எத்தினி பிரியமா பேசின. நீ எங்க இருக்கன்னு விசாரிக்கத் தோணல நேத்து. நீ அப்பால போன வொடனையே ஒரு பெரிய மனுஷன் காருல வந்து அம்மாம் பழத்தையும் வாங்கிக்கினாரு. நாப்பது ரூவா வெலதான் பேசினேன். அவுரே ஐம்பது ரூபா வெலக்கி வைச்சுக்கன்னு கொடுத்துட்டுப் போனாரு என்ன அதிசயம் நேத்து. அம்மாம் வெலக்கி, அம்மாஞ்சுருக்கா வித்ததேயில்லதாயி. அதான் அதை உங்கிட்ட சொல்லி, ஒங்க பெரியம்மா புத்தி சொல்லுவாங்கன்னியே அவங்களையும் பாத்து போகணும்னுதாந்தாயி கூவி விக்காம நேர தேடிக்கிட்டு வாறேன்” என்று தன்னாவல் நிறைவேறியதை மகிழ்வுடன் கள்ளம் இல்லாது கூறினாள் மங்காத்தா.

இவள் உள்ளத்தின் தூய்மை நன்றியுணர்வு அன்னை-யைல்லவா தரிசிக்கச் செய்கிறது. உமாவுக்கும் மகிழ்ச்சி.

அப்போது உள்ளிருந்து வெளியே வந்த உமாவின் அம்மா, “உமா! யாருடன் பேசிக்கொண்டிருக்கிறாய்?” என்று கேட்ட வண்ணம் வந்தாள்.

“இவங்கதான் ஒங்க பெரியம்மாவா?” என்று இவள் அம்மாவை மரியாதையுடன் பார்த்தவண்ணம் கேட்டாள் மங்காத்தா.

உமாவின் அம்மா அதைக்கேட்டு, “பெரியம்மாவா?” என்றார் வியப்புடன். ஏனெனில் உமாவின் அம்மாவிற்குச் சகோதரிகள் யாருமிலர். உமா குறும்பாய்ச் சிரித்தாள்.

“உள்ள வாங்க. இவங்க எங்க பெரியம்மா இல்லை. இவங்க என்னைப் பெற்ற அம்மா. பெரியம்மா உள்ள இருக்காங்க” என்றாள்.

“உமா பொய் சொல்ல மாட்டாளே! உள்ளே பெரியம்மா எங்க இருக்காங்க?” என்று உமாவின் அம்மா வியப்படைந்தாள்.

மங்காத்தா கூடையை கவனமாக ஓரிடத்தில் வைத்துவிட்டு உமாவைத் தொடர்ந்தாள்.

உள்ளே நுழைந்ததும் இடப்பக்க அறையில் தொங்கிய திரையை மென்மையாக விலக்கினாள் உமா.

உள்ளே ஒரே நறுமணம் சூழ்ந்து இனிமையுடன் வரவேற்றது. உமா குழல் விளக்கை எரிய வைத்தாள். பளீரென்ற ஒளியில் அறையின் நடுவே டேபிள் வைத்து அழகிய பூவேலைப்பாடுடன் துணி விரித்து அதன்மீது ஒரு படம் இருந்தது தெரிந்தது. அந்தப் படத்திலிருந்தவர் ‘கிராப்’ தலையுடன் மேலை நாட்டு முறையில் உடை தரித்திருந்தார். கண்ணால் சிரித்துக் கொண்டு தன்னை யார் பார்த்தாலும் அவர்களைக் கனிவுடன் பார்ப்பது போலிருந்தது. பக்கத்தில் பாவாடையின் தங்கச்சரிகையுடன் இரண்டு பாத மலர்கள் கொண்ட படமும் இருந்தது. முன்னே தட்டுகளில் அழகழகான பூக்கள் வைக்கப்பட்டிருந்தன.

“இவங்களை யார்னு நினைக்கிறது?” என்று குழம்பிய வண்ணம் நின்றாள் மங்காத்தா. இவங்க (உமாவின்) அம்மா புடவை கட்டியிருக்காங்க, இவங்க சட்டை போட்டிருக்காங்க என்று எண்ணிக்கொண்டிருந்தாள்.

“என்ன பார்க்கிறீங்க?” என்றாள் உமா சிரித்த வண்ணம்.

“இவங்களா உங்க பெரியம்மா?” என்று வியப்புடன் கேட்டாள் மங்காத்தா.



“ஓ! சட்டை போட்டிருக்காங்களேன்னு, கிராப் தலையுடன் இருக்காங்களேன்னு பாக்கிறீங்களா?” என்றாள் உமா அவள் குழப்பமறிந்து.

ஆமாம் என்பது போல் தலையசைத்தாள் மங்காத்தா.

“இவங்கள உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?” என்றாள் உமா.

“ரொம்பப் புடிச்சிருக்குத் தாயி. எம்மாம் அழகாச் சிரிக்கிறாங்க. என்னையே பாக்குற மாதிரி வேறயில்லயிருக்கு?” என்று மகிழ்ந்து வியந்தாள்.

“இவங்கள நான் ஏன் பெரியம்மா என்று சொன்னேன் தெரியுமா? எனக்கு மட்டுமில்ல, எங்க அம்மாவுக்கும், உங்களுக்கும் எல்லோருக்குமே இவங்கதான் அம்மா. அதனாலதான் பெரிய அம்மா என்று சொன்னேன்” என்று புன்னகையுடன் கூறினாள் உமா.

மங்காத்தாவுக்குச் சிறிது புரிவது போலவும், குழப்பமாகவும் இருந்தது. “நம்பவூரு கருணாம்பிகை (அவ்வூர்க் கோயிலுள்ள அம்பாள் பெயர்)யைத்தான் எல்லாருக்கும் அம்மான்னு சொல்லுவாங்க. இவங்களும் அவங்களைப் போல சாமியா” என்றாள் மங்காத்தா.

“அவங்களைப் போல இல்ல. அவங்கதான். அங்க (கோவிலில்) அப்படியிருக்காங்க. இங்க இப்படி இருக்காங்க. எப்படி நெனச்சாலும் அப்படியும் இருப்பாங்க” என்றாள் உமா.

“அப்டீன்னா கும்பிடற தெய்வம்னு சொல்றியா தாயி?” என்றாள் மங்காத்தா.

“அப்படி நினைத்தாலும் தவறில்லை. தெய்வம் மனித வடிவில் வரும் என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா?” என்றாள் உமா.

“ஆமாமாம். சொல்லுவாங்க ராமரு, கிருஷ்ணரு இவங்கெல்லாம் அப்படித்தானே வந்தாங்க” என்று ஆதாரபூர்வமாய் நம்பிக்கை தெரிவித்தாள் மங்காத்தா.

“தெய்வம் சொல்வது பலிக்கும்தானே?” என்றால் உமா.

“ஆமாம். தெய்வவாக்கு பொய்க்காதும்பாங்க” என்றாள் மங்காத்தா.

“இவங்க சொன்னது நேற்று பலித்ததா உங்களுக்கு?” என்று உமா கூற.

“ஆமாந்தாயி. இவங்க சொல்வாங்கன்னு ஒரு புத்திமதி சொன்னீங்களே. அத மனசார நான் ஏத்துக்கிட்டதும் அப்படியே பலிச்சிடுச்சு. அந்த சந்தோஷந்தானே ஒங்களத் தேடி வந்தேன்” என்றாள் உற்சாகமாக மங்காத்தா.

“சில சில சாமிய கும்பிடறவங்க அதுக்கு அடையாளமா, மஞ்சள்துணி, சிவப்புத்துணி கட்டுவாங்க. இவங்கள ஏத்துக்கிட்டவங்க இவங்க சொல்லியிருக்கிற புத்திமதியை ஏத்து நடந்து அவங்கள புரிஞ்சிப்பாங்க” என்று அவளுக்கு விளங்குவது போல் சொன்னாள் உமா.

“என்ன மாதிரி சனங்களுக்கெல்லாம் கும்பிடறத்துக்கு நேரம் ஏது? இப்படி புரிஞ்சு நடந்தாலே கும்பிடற மாதிரியின்னா எந்நேரமும் கும்பிடற மாதிரி ஆவுதில்ல. நல்ல வழிதான் சொன்ன தாயி. ஒங்க வழியா வந்து எனக்கு வாக்கு சொன்ன தெய்வத்தை நா மறக்க மாட்டேன் தாயி. அப்பப்ப வந்து பாத்து போக மட்டும் என்னெ வெலக்கிடாத தாயி (விலக்கிவிடாதே)” என்று உணர்வு பொங்கக் கூறி ஒரு குலை திராட்சையை ஸ்ரீ அன்னையின் முன் வைத்து பயபக்தியுடன் வணங்கிச் சென்றாள் மங்காத்தா.

“போய் வாங்கம்மா. விரும்பும் போதெல்லாம் நீங்க இங்கு வரலாம்” என்று அன்புடன் விடை கொடுத்த உமாவை அவள் அம்மா வியப்புடன் பார்த்து, “இவங்களை உனக்கு எப்படித் தெரியும், என்ன சொல்லிவிட்டுப் போறாங்க?” என்று கேட்கிறார்.

அதுவாம்மா. நம்ம கிரேஸ் மதர் கண்களைப் பார்க்கும் போதெல்லாம் உள்ளே ஒரே பேரானந்தமாய் இருக்கும். அதனால் அன்னைக்கு எப்படி நன்றி சொல்வது என்று



எண்ணிய போது, அன்னையின் நூல் ஒன்றில் ஒரு செய்தி கண்ணில்பட்டது.

“இறைவனின் பேரானந்தத்தில் திளைத்திரு. என்னை மகிழ்ச்சிப்படுத்த அதுவே சிறந்த வழி” என்றிருந்தது. இறைவனின் பேரானந்தம் எது என்று அறிய மேலும் அந்த நூலைப் பார்த்ததில் “உள்நோக்கம் ஏதுமில்லாது சுயம்புவாக (தானே) எழும் உணர்ச்சிப் பெருக்கு பேரன்பாகும். அந்த அன்புக்கு வேறெந்தக் காரணமும் இருக்க வேண்டியதில்லை” என்றிருந்தது. அப்படிப்பட்ட அன்பு, ஆனந்தம் திடீர் திடீரென எழுவதை உணர்ந்தேன். அதுவே நிலை பெற என்ன செய்யலாம் என்றெண்ணிய போது, ‘புஷ்பாஞ்சலி’ என்ற நூலில் நமக்குள்ள திறனை அதிகப்படுத்தும் கருவியாக பூக்கள் செயல்படும் என்று குறிப்பிட்டு சில மலர்களும் அவை பெற்றுத்தரும் திறன்களும் என்ற அட்டவணையில் திராட்சையும் அதன் திறன் தெய்வீக ஆனந்தம் என்றும் படித்த கருத்து நினைவுக்கு வந்தது. எனவே திராட்சை வாங்கி அன்னைக்குச் சமர்பிக்க எண்ணிப் போனேன். இவர்களிடம் பழம் வாங்கப் போன போது இவர்கள் பிரச்சனையைக் கூறினார்கள். அதற்கு அன்னை முறையில் உள்ள தீர்வைச் சொன்னேன். அது பலித்ததால் நன்றியுடன் வந்து பார்த்துப் போகிறார்கள் என்று உமா கூற, “ஈன்ற பொழுதிற் பெரிது உவக்கும் தாயாக” அவள் அம்மா அவளைப் பார்த்தார் எனக் கூறவும் வேண்டுமோ!

(முற்றும்)

## ஜீவிய மணி

*அவமரியாதையைப் புரிந்து மனம் உவந்து*

*ஏற்பவருக்குரியது மரியாதை.*

**MALARNDHA JIVIYAM**

Form IV (See Rule 8)

Statement about ownership and other particulars about **Malarndha Jiviyam** (according to Form No. IV. Rule 8 circulated by the Registrar of Newspaper for India).

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Puducherry |
| 2. | Period of its Publication | : | Monthly |
| 3. | Printer's Name | : | **Mr. S. Devanathan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Sakthi Offset Printers,<br>No. 238, Lawspet Main Road,<br>Pakkamudayanpet, Puducherry - 605 008. |
| 4. | Publisher's Name | : | **Mr. P.V. Sankar** |
| | Nationality | : | Indian |
| | Address | : | Flat No. 11, 2nd Floor, Grace Apartments,<br>177, Pappammal Koil Street,<br>Vaithikuppam, Puducherry - 605 012. |
| 5. | Editor's Name | : | **Mr. N. Asokan** |
| | Nationality | : | Indian |
| | Address | : | 5, Puduvai Sivam Street,<br>Venkata Nagar Extn., Puducherry - 605 011. |
| 6. | Name and address of the individual who owns the newspaper and partners or shareholders holding more than 1% of the capital | : | **The Mother's Service Society**<br>5, Puduvai Sivam Street,<br>Venkata Nagar Extn.,<br>Puducherry - 605 011. |

I, (P.V. Sankar) hereby declare the particulars given are true to the best of my knowledge and belief.

Sd . . . . . . . . . . . . . . . . . .

(P. V. Sankar)

Date: 01-03-2016

Signature of the Publisher.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605 008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Pappammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605 012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605 011.

# முயற்சி

- முயற்சி பெரியது.
- விடா முயற்சி புனித தெய்வீகம் வாய்ந்தது.
- விடா முயற்சியில் வெளிப்படுவது அனந்தம்.
- முயற்சி மனித செயல், விடா முயற்சி தெய்வம் செயல்படுவது.
- விடா முயற்சி உடலுழைப்பு.
- உயிருக்குரிய விடாமுயற்சி ஆர்வம், ஆழ்ந்த பக்தி, அதையுடையவர் ஆழ்வார்.
- விடா முயற்சிக்கு சூட்சுமம் உண்டு, அது பரிணாமம்.
- விடா முயற்சியின் சூட்சுமத்திற்கு நுணுக்கம் உண்டு. அது சுதந்திரம்.
- சுதந்திரம் ஜோதியானால், உடல் காயகல்பம் பெறும்.
- உடலில் காயகல்பம் சித்திக்க அஞ்ஞானம் ஞானமாக வேண்டும்.
- அஞ்ஞானம் ஞானமாக மனம் சத்திய ஜீவியமாக வேண்டும்.
- சத்திய ஜீவனுடைய வாழ்வு தெய்வீக வாழ்வு.
- தெய்வீக வாழ்வு மௌனமாகலாம். மௌனத்தின் பின் மௌன வாழ்வாகலாம். அது சிறப்பு.

# பெரிய மனிதன்

பெரிய மனிதன் எனில் அறிவு படைத்தவன், அதிகாரத்திலுள்ளவன், பெரும் செல்வம் படைத்தவனாகும். பெரிய மனிதன் பெரிய ஆத்மாவாகமாட்டான். நாணயம், பெருந்தன்மை, பெருந்தலைமை, உயர்ந்த நல்லெண்ணம், இதம் இங்கிதம், பதம், பக்குவம், பவித்திரம் உள்ளவர் பெரிய ஆத்மாவாவார். மகாத்மா என்றால் பெரிய ஆத்மாவெனினும் அதையும் கடந்தவரையே மகாத்மா என்போம். பணம், பதவி ஆசையற்றவருக்கு அப்பட்டம் உண்டு. நாம் மகாத்மா என அழைத்தவர் பதவியை உற்பத்தி செய்து அடுத்தவர்க்கு அளித்தவர், காந்திஜி. அன்றைய அரசர்க்கில்லாத வசதி இன்று அனைவருக்குமிருப்பதால், இன்றைய எளிய மனிதன் அவ்வரசர்களைவிட உயர்ந்தவனாக மாட்டான். எளியவனாக இருந்தாலும் உயர்ந்த வசதி பெறும் காலத்தில் நாம் வாழ்கிறோம். 1947-இல் 20,000 ஏக்கர் தமிழ் நாட்டில் பெரிய பண்ணையாயிற்று. ஏக்கர் 20,000 ரூபாய் விலைப்படி அப்பண்ணை அன்று 40 கோடி பெறும். இன்று பெரு நகரங்களில் மனை ஒரு ஏக்கர் 40 கோடி பெறும். அது உள்ளவர் பலர். அது போல் அன்பர்கள் உள்ளபடி அன்னையை ஏற்று வாழ்ந்தால் அவர் பெறும் செல்வம், புகழ், சிறப்பு, இன்று உலகம் அறியாததாக இருக்கும்.